பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை17 வெள்ளிக்கிழமை (30.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:065

# 48 மணி நேரத்துக்குள் சிவிலியன்களை வெளியேற புலிகள் அனுமதிக்க வேண்டும்

## ஜனாதிபதி நேற்று அறிவிப்பு; இந்தியா வரவேற்பு

கொழும்பு, ஜனவரி30

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியிருக்கும்பிரதேசங்களில்சிக்குண்டுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு - பாதுகாப்பான பாதை வசதி செய்து கொடுக்கப்படும்.

அவர்கள் அடுத்த 48 மணிநேரத்துக்குள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதற்குப் புலிகள் அனுமதிக்க வேண்டும்.

- இவ்வாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று இரவு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு அறிவித்தார்.

அவரின் இந்த அறிவிப்பை இந்தியா வரவேற்றுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால் அழைப்பு கைவிடப்பட்டது

யாழப்பாணம், ஜன.30

வடக்கு-கிழக்கில் இன்று நடத்துமாறு விடுக்கப்பட்டிருந்த ஹர்த்தால் அழைப்பு தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கைவிடப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

ஏற்கனவே விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்து வரும் தமிழ் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நீர்மூழ்கிக் கப்பலையும் படகுகளையும் கைப்பற்றியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஜன.30

தண்ணீருக்கு அடியில் செல்லக் கூடிய புலிகளின் 35 அடி நீளமான நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றையும் அத்தகைய 3 சிறிய படகுகளையும் இராணுவத்தினர் கைப்பற்றி உள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு, உடையார்கட்டுக்குளம் பிரதேசத்தில் மூன்றாவது துரித நடவடிக்கைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினரே இவற்றைக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் பேரவலம் குறித்து ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் கவலை

கொழும்பு, ஜன.30

இலங்கையின் வட பகுதியில் போர்ச் சூழலில் சிக்கியுள்ள இரண்டரை லட்சம் வன்னிப் பொதுமக்கள் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வரும் பேரவலம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக் கான உயர் ஆணையாளர் நவநீதம் பிள்ளை கவலை... (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றைய ஷெல் வீச்சில் 44 பேர் பலி; 178 பேர் படுகாயம்!

கொழும்பு, ஜன.30

மக்கள் பாதுப்பு வலயப் பகுதிகளான உடையார்கட்டு, மாணிக்கபுரம், சுதந்திரபுரம், இருட்டுமடு ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 44 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 178 பேர் காயமடைந்துள்ளனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.





அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:- சுதந்திரபுரம் 100 வீட்டுத்திட்டப் (16 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் பேரவலத்தைத் தடுப்பதில் மத்திய அரசின் மெத்தனப் போக்கால் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு நிலை!

## தலைவர்கள் புதிய இயக்கம்: மாணவர் போராட்டம் உச்சத்தில்

சென்னை, ஜனவரி 30

ஈழத் தமிழர்கள் படும் அவலங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா உரிய முறையில் தலையிடத் தவறிவிட்டது என்று கூறி அதற்கு எதிராகத் தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பேரெழுச்சி ஏற்பட்டிருக்கிறது. எங்கும் ஒரே போராட்டங்கள், கடையடைப்புகள், கொடும்பாவி எரிப்புகள் என்று தமிழகம் முழுவதும் பெரும் கொந்தளிப்பு நிலை காணப்படுகிறது.

மத்திய அரசாங்கத்தின் மெத்தனப் போக்கால் விரக்தியுற்ற தமிழகத் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து 'இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்' என்ற பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

மறுபுறம் பல்கலைக்கழக மாணவர்களும் பல்வேறுபட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் தொடர் போராட்டங்களில் குதித்துள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் தமிழர்களை ஏமாற்றும் செயல் என்று கூறிய தமிழகத் தலைவர்கள், அவரது விஜயத்தினையடுத்தே 'இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கும் இயக்கம்' என்ற பெயரில் அமைப்பைத் தொடங்கியுள்ளனர்.

பாட்டாளி மக்கள் கட்சி ஸ்தாபகர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் தா. பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன், தமிழீழ விடுதலை ஆதரவாளர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் அவலத்தை நீக்கக் கோரி தமிழக இளைஞர் தீக்குளித்து மரணம்!

சென்னை, ஜன.30

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் மத்திய அரசு பாராமுகமாக இருப்பதாக தெரிவித்தும் அவர்களின் அவலநிலையை நீக்கிப் பாதுகாக்க கோரியும் தமிழக இளைஞன் ஒருவர் நேற்று தீக்குளித்து தற்கொலை செய்தார்.

மத்திய அரசு அலுவலகமான சாஸ்திரி பவன் முன்பாக நேற்று முற்பகல் 10.30 மணியளவில் தமது உடலில் பெற்றோலை ஊற்றி முப்பது வயதான முத்துக்குமார் என்பவரே தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டவர் ஆவார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்றோர் சிகிச்சை பெறுவதற்கு போக்குவரத்து ஒழுங்கு செய்ய ஐ.நாவிடம் நடேசன் கோரிக்கை

கொழும்பு,ஜன.30

வன்னி நிலப்பரப்பில் தாக்குதலில் படுகாயமடைந்த நோயாளர்களுக்கான போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்ய ஐ.நா. உள்ளிட்ட அனைத்துலக அமைப்புகள் உடனடியாக ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்திருப்பவை (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### அமரர் கந்தையா வல்லிபுரம்

| அன்னை மடியில் | கணபதி அடியில் |
|---|---|
| 15.04.1941 | 31.12.2008 |

அன்பின் உறைவிடமாய் அறமே வடிவமதாய்
ஆதரவு காட்டி எமை ஆளாக்கிய அன்புத் தெய்வமே அப்பா
ஆலமரமாய் நீங்கள் இருக்க
அந்த நிழலில் ஆறியிருந்தோம்
ஆலமரம் சாய்ந்ததப்பா
ஆறுதலின்றித் தவிக்கின்றோம்
தந்தை யெனும் தானத்தில் தளராது சேவை செய்தீர்
தவிக்கின்றோம் மக்கள் எல்லாம் தங்கள் நினைவாலே
கணப் பொழுதில் ஈசன் கழலினை சேர்ந்து விட்டீர்
எப்போதும் உம் நினைவால் ஏங்கி நிதம் தவிக்கின்றோம் பெற்றிடுக சாந்தி
மருதங்குள விநாயகன் கழலிணையில்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று(30.01.2009)வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.74/12, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

## நினைவஞ்சலி

| 11 ஆம் ஆண்டு | | 8 ஆம் ஆண்டு |
|---|---|---|
| அமரர் சின்னப்பு வல்லிபுரம் | | அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம் |
| 02.05.1912 | தோற்றம் | 09.06.1946 |
| 03.02.1998 | மறைவு | 28.01.2001 |





திதி: 30.01.2009 (சதுர்த்தி)

எம்மை வாழ வைத்த அன்புத் தெய்வங்களே
உங்கள் அன்பும் ஆசியும் என்றும்
எம்மை வழி நடத்த ஆண்டவனை வேண்டுகின்றோம்.

*566/5, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.


நாளை யாழ் நகரில்

e-STUDIO TOSHIBA



Toshiba from North Link Engineering

*Showroom with workshop*
North Link Engineering
No. 360/3, Main Street, Jaffna, Sri Lanka.
Telephone : 021 222 4099,
Fax : 2224099
E-mail : northlinkeng@yahoo.com

*Authorized Distributor*
*John Keells Office Automation (Pvt) Ltd.*
320/1, Union Place, Colombo - 2, Sri Lanka.
Telephone : 2313000, 4702611 Fax : 2431745
Technical Service Station: 2445760
Email : jkoa@keells.com
Business Registration No. Pv 127


## பூப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சென்.ஜோன்ஸில்

வலிவடக்கு, ஜன.30

யாழ் மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மாவட்ட மட்டத்தில் நடத்தும் ஆண்கள், பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டிகள் நாளை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி பூப்பந்தாட்ட உள்ளரங்கில் இடம்பெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் 11 அணிகளும் பெண்கள் பிரிவில் 09அணிகளும் இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இப்போட்டிகளுக்கான நிரல் ஒழுங்குகள் காலை 8மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

நிரல் ஒழுங்குகள் போட்டி நடைபெறுவதற்கு முன்னர் தயாரிக்கப்படவுள்ளமையால் கலந்து கொள்ளவுள்ள அனைத்து அணிகளையும் உரிய நேரத்திற்கு கல்லூரிக்கு சமுகமளிக்கும்படி யாழ் மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி ஜே.எம்.எ. ரூபசிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

உரியநேரத்திற்கு சமுகம் கொடுக்காத அணிகள் நிரல் ஒழுங்கில் தெரிவுசெய்யப்படமாட்டது எனவும் புதிய அணிகள் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பினால் நிரல் ஒழுங்கு நேரத்திற்கு கல்லூரிக்கு சமுகம் கொடுத்து இணைந்து கொள்ள முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

(1-86)


டிஜிற்றல் பிறின்டிங்
1 சதுர அடிக்கு 200/=
S.S.பரசோதரன் ஆட்ஸ்
40/2, PIRIWENA ROAD, RATMALANA, COLOMBO.
212, கோயில் வீதி, நல்லூர், யாழ்.

BARATHY
*சித்தன்கேணி*
A/L 2011
கலை, வர்த்தகம்
நாளை ஆரம்பம் 31.01.2009 சனி
*உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.*

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட் யாழ்ப்பாணம் | கே.கே.எஸ்.றோட் இணுவில்
இதுவரை அனுமதிபெறாத மாணவர்களுக்கு
மீண்டும் ஒரு புதிய பிரிவு
நாளை ஆரம்பம் 31.01.2009 சனிக்கிழமை
A/L 2011
கலை, வர்த்தகப் பிரிவு
நீங்கள் நன்கு அறிந்த பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்
யாழ்நகரில் - கலை, வர்த்தகம் - 9 a.m.
இணுவிலில் - கலைப்பிரிவு -8 a.m., வர்த்தகப்பிரிவு - 2 p.m.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேசத் தலையீடு அவசியம்

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை - ஏன் உலகம் வாழ் தமிழர்களைப் பொறுத்தவரை - இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் மூன்று மணிநேர கொழும்பு விஜயம் முதுகில் குத்தும் செயல் போல - மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போல - அமைந்து விட்டது.

இலங்கையில் யுத்த நிறுத்தத்தை உடன் ஏற்படுத்தி, ஈழத் தமிழர்களின் அவலச் சாவுகளையும் அழிவுகளையும் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என்ற தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக அனைத்துக் கட்சிக் குழுவினர் கோர, அதற்குத் தமது வெளிவிவகார அமைச்சரைக் கொழும்புக்கு அனுப்பி இது குறித்துப் பேசுவோம் என்று பதிலளித்தார் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.

ஆனால், அப்படி உறுதியளித்து சுமார் இரண்டு மாத காலமாக ஏதும் நடக்கவில்லை - யுத்த முனையில் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் காவு கொள்ளப்பட்டமையைத் தவிர.

அதன் பின்னர் திடீரென - திடுதிப்பென - கடந்த செவ்வாயன்று பிரணாப் முகர்ஜி வந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசினார். யுத்த நிலைமை குறித்து இலங்கை இராணுவத் தளபதி கொடுத்த விளக்கங்களைச் செவிமடுத்தார். புறப்பட்டார். அவ்வளவுதான்.

யுத்தத்தை நிறுத்தச் சொல்லி வற்புறுத்துவார் என்று பார்த்தால் ''இலங்கை இராணுவத்தின் வெற்றிகள், சுமுக வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான அரசியல் சூழ்நிலையை வழங்கியுள்ளன.'' என்று கூறி இலங்கைப் படைகளின் இராணுவ நடவடிக்கைகளை மெச்சிப் பாராட்டும் விதத்தில் கருத்துத் தெரிவித்துவிட்டுப் போயிருக்கின்றார் அவர்.

ஈழத் தமிழர்களின் அவலம் பற்றி புதுடில்லி அலட்டிக்கொள்ளப் போவதில்லை என்பது அவரது கருத்தில் தெளிவாகப் பிரதிபலிப்பதை இலகுவாக உணர்ந்து கொள்ள முடியும். அதுதான் உண்மை; யதார்த்தம்.

ஈழத் தமிழர்களின் பேரவலம் கண்டு தமிழகமே கொதித்துப் போயிருக்கின்றது. ஈழத் தமிழர் விரோதக் கருத்துகளைக் கூறி வரும் ஜெயலலிதா கும்பலும், ஈழத் தமிழர் விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமல் தமக்கேயுரிய - வழமையான - அரசியல் சித்து விளையாட்டுகளை நடத்திவரும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியும், தற்போது தமிழகத்தில் கிளர்ந்து வரும் ஈழத் தமிழர் ஆதரவுப் பேரெழுச்சியுடன் ஒத்துப் போகாமல் தொடர்ந்து முரண்டு பிடித்தால், மாநில அரசியலில் அவர்கள் அடிபட்டு, அரசியல் அநாதைகளாகிவிடும் அளவுக்கு தமிழகத்தின் எழுச்சி காணப்படுகின்றது.

ஆனால் புதுடில்லியில் தற்போதைய காங்கிரஸ் ஆட்சிப்பீடம் நீடிக்கும்வரை ஈழத் தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்கும் நடவடிக்கைகளை - தமிழகத்தில் எத்தகைய கிளர்ச்சி வந்தாலும் - இந்திய நடுவண் அரசு எடுக்காது என்பது நிச்சயம்.

தமிழகத்தினாலும் எதுவும் செய்ய முடியாது, புதுடில்லியும் சரிப்பட்டு வராது என்றால் இந்நிலைமையை ஒட்டி ஈழத் தமிழர்கள் இனி என்ன செய்வது என்ற கேள்வி எழுகின்றது.

இலங்கைத் தமிழர் விடயம் இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான இந்தியாவுக்குரிய விடயம், இந்தியப் போக்கை அனுசரித்தே மேற்குலகமும் சர்வதேச சமூகமும் இதில் பங்காற்ற வேண்டும்என்றகருத்துநிலைப்பாடு சர்வதேச மட்டத்தில் பிரதிபலிக்கப்பட்டு வருகின்றது.

அந்தக் கருத்துருவாக்கத்தைத் தமிழர் தரப்பு உடைக்க வேண்டும். இந்தியாவைத் தாண்டி, இவ்விடயத்தை சர்வதேச மயப்படுத்த வேண்டும். சர்வதேச சமூகங்களும், நாடுகளும் இலங்கை சம்பந்தப்பட்ட விடயங்களில் தலையிட்டு அவலப்படும் ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யவேண்டிய கடப்பாடும், பொறுப்பும் உண்டு என்பதை நிலைநிறுத்தும் வகையில் தமிழர் தரப்பினால் காய் நகர்த்தல் மேற்கொள்ளப்படவேண்டும்.

எனவே, இலங்கைத் தீவில் தமிழினம் அனுபவிக்கும் கொடூரங்களை - இந்திய உபகண்டப் பரப்புக்கு வெளியே - சர்வதேசத்தின் பார்வையில் ஆழமாகப் பதிக்கத்தக்க வகையில் வெளிப்படுத்தி, அம்பலப் படுத்தி, பூகோளப் பரப்புரையை முடுக்கி விடவேண்டிய தருணம் இது.

ஏற்கனவே, புலம் பெயர் தேசங்களில் வாழும் தமிழர்கள் இவ்விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை விரைந்தும், முன்னுரிமை அளித்தும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் அவர்கள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், வழிமறிப்புகள், ஹர்த்தால்கள் போன்ற பரப்புரை நடவடிக்கைகள், அதன் நோக்கத்துக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் திசை திரும்பாமல் பார்த்துக் கொள்வது மிக முக்கியமாகும்.

ஏற்கனவே தமிழர் தரப்பில் விடுதலை உரிமைக்காகப் போராடும் புலிகள் இயக்கம் 'பயங்கரவாத இயக்கமாக' மேற்குலகால் அடையாளம் கண்டு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இச்சமயத்தில் ஈழத் தமிழர் உரிமைகளை வலியுறுத்தி மேற்கு நாடுகளில் போராட்டம் மேற்கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தும் ஈழத் தமிழ் ஆதரவாளர்கள், தமது ஆர்ப்பாட்டம் போன்ற நிகழ்வுகள் குறித்து மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

அவையும் வன்முறை நிகழ்வுகளாக சித்திரிக்கப்பட்டு, பயங்கரவாத செயற்பாடுகளாக அடையாளம் குத்தப்படும் ஆபத்து உண்டு. பொங்கியெழுந்துள்ள புலம் பெயர் தமிழர்கள் இதில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

# வன்னி மக்களுக்கான உண்ணாவிரதம் இரண்டாவது நாளாகத் தொடர்கிறது

வலி.வடக்கு,ஜன.30

யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் வன்னியில் இடம்பெறும் மனிதப் பேரவலத்தை நிறுத்தக் கோரி யாழ்ப்பாணப் பேராலயத்தில் நடைபெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

நேற்றைய உண்ணாவிரதப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகளுடன் பொதுமக்களும் கலந்து கொண்டார்கள்.

நல்லை ஆதீனகுரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் நேற்றுக் கலந்து கொண்டார். தொடர்ந்து இடம்பெறவுள்ள இப் போராட்டம் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக இடம்பெற உரிய ஒழுங்குகளை ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்டுள்ளார்கள். (1-86)

## உண்ணாவிரதப் போராட்டம் நாளை குருநகரில்

வலி.வடக்கு,ஜன.30

வன்னியில் இடம்பெறும் மனிதப் பேரவலத்தை நிறுத்தக் கோரி யாழ். போராலயத்தில் இடம்பெறும் உண்ணாவிரதப் போராட்டத்தின் தொடர்ச்சியாக நாளை சனிக்கிழமை குருநகர் புதுமை மாதா தேவாலயத்தில் உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

தொடர்ந்து மக்களின் பங்களிப்புக்கு ஏற்ப இடத்துக்கு இடம் இந்த உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-86)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றும் பகிஷ்கரிப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.30

வன்னியில் மக்களின் பேரவலத்தை நிறுத்தி இரு தரப்பினரும் சமாதான நடவடிக் கையில் ஈடுபடக் கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களினால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட வகுப்பு பகிஷ்கரிப்பும், நிர்வாக முடக்கல் போராட்டமும் நேற்று நான்காவது நாளாகத் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்தினால் யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களின் செயற்பாடுகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

மாணவர்களினதும், கல்விசார் ஊழியர்களினதும் வரவு இன்மையால் பல்கலைக்கழக வளாகம் நேற்றும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு விடுக்கப் பட்டு தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருவது தெரிந்ததே. (1-9)

# தார் விலை அதிகரிப்பு, நிதிப் பற்றாக்குறை ஆகியவற்றால் வீதிகள் புனரமைக்கப்படவில்லை

## உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.30

தார் விலை அதிகரிப்பு மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் பிரதேச சபைகளுக்குட்பட்ட வீதிகளின் புனரமைப்புப் பணிகள் நடைபெறவில்லையென உள்ளூராட்சித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதேச சபைகளின் எல்லைகளுக்குட்பட்ட வீதிகள் பல மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்தில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதிகளைத் தார் ஊற்றிப் புனரமைப்புச் செய்வதற்கு நிதி இல்லாதமை மற்றும் தாரின் விலை அதிகரிப்பு ஆகியவையே காரணமென்று தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு ஒதுக்கப்படும் நிதி மூலமே வீதிகள் புனரமைப்புத் தொடர் பாக முடிவெடுக்கப் படும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-224)

# வன்னியில் காயமடைந்த 226 பேர் ஐ.நா. வாகனத்தில் வவுனியாவுக்கு

கொழும்பு, ஜன.30

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் கடுங்காயங்களுக்குட்பட்ட 50 குழந்தைகள் உட்பட 226 பேரை ஏற்றிக் கொண்டு ஐக்கிய நாடுகளின் வாகனத்தொடரணி வவுனியா நோக்கிப் புறப்பட்டது என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் பேச்சாளர் கோர்டன் வேஸ் நேற்றுத் தெரிவித்தார்.

காயப்பட்ட அனைவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் காயமடைந்தவர்களை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு மறுப்புத் தெரிவித்தனர் என்று ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# பாலகுமாரன் காயம்

வவுனியா, ஜன.30

வன்னியில் உடையார்கட்டுப் பகுதியில் இராணுவத்தினரின் ஷெல் வீச்சில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் காயமடைந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அப்பகுதியில் பாலகுமாரன் தமது வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் அந்த வாகனத்துக்கு சற்றுத் தொலைவில் வீழ்ந்து வெடித்த ஷெல் ஒன்றின் சிதறல்களால் அவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவரது உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்றும் சிறுகாயங்களே ஏற்பட்டன என்றும் வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

# 2003-2004 கல்வியாண்டில் பயின்ற விஞ்ஞான மற்றும் கலைப்பீட மாணவரின் பெறுபேற்றறிக்கையை வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.பல்கலைக்கழக 2003-2004 கல்வியாண்டு விஞ்ஞான மற்றும் கலைப்பீட மாணவர்களின் நிலைப் பெறுபேற்றிக்கைகளை அடுத்த வார மளவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத்துணைவேந்தர்பேராசிரியர் என்.சண் முகலிங்கன் தெரிவித்தார்.

மேற்படி கல்வியாண்டில் கல்வி கற்ற மாணவர்களின் இறுதிப்பரீட்சை கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் நடை பெற்றபோதும் நிலைப் பெறுபேற்றறிக்கை வழங்கப்படவில்லை என்று மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாணவர்களின் இறுதிப்பரீட்சைகள் நடைபெற்று இறுதிக்கட்ட வேலைகள் நிறைவு பெற்றும் அவர்களின் நிலைப் பெறு பேற்றறிக்கைகளை வழங்குவதற்குப் பல்வேறு காரணங்களால் தாமதம் ஏற்பட்டிருந்தது.

அவற்றை அடுத்த வார நடுப் பகுதியில் வழங்குவதற்கான நடவ டிக்கைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.(50-9-95)

(11 ஆம் பக்கத்தில் முன்னர் அச்சாகிய வாசகர் திருமுகம்)

# காரைநகரில் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 30

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அடுத்த மாதம் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற்று மகோற்சவம் நிறைவுறும். (1-4)

## நாளை

| | |
|---|---|
| தை 18 | 31.01.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.ப.04.36 வரை |
| நட்சத்திரம்: | உத்தரட்டாதி |
| | பி.ப.02.46 வரை |
| சுபநேரம்: | 03.36 - 05.06 |
| [illegible] | 09.36 - 11.06 |

# சுன்னாகம் மின் நிலையத்தில் பொருத்த மூன்று புதிய மின் பிறப்பாக்கிகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.30

குடாநாட்டுக்கான மின்விநியோகப் பணிகளுக்கென 3 புதிய மின் பிறப்பாக்கிகள் இலங்கை மின்சார சபையினால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் மின் வழங்கும் நடவடிக்கைகள் இரு வாரங்களில் ஆரம்பமாகும் என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கை மின்சார சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட 10 மின்பிறப்பாக்கிகளில் 3 மின்பிறப்பாக்கிகள் தற்போது யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று இறக்கப்பட்டுள்ளது. ஏனையவற்றை இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒரு மெகா வாட்ஸ் வலுக் கொண்டவை.

இந்த மின் பிறப்பாக்கிகளை சுன்னாகம் மின் நிலையத்தில் பெருத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மின் பிறப்பாக்கிகள் இயங்கத் தொடங்கியதும் மின்வெட்டு நேரம் மேலும் குறைவடையும் என அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவால்களும் போட்டிகளும் நிறைந்த கல்வி உலகில் அதியுயர்துறையான சட்டத்துறையில் நீங்களும் பிரவேசிக்கலாம்

இலங்கையின் Attorney - At - Law என்ற சட்டத்தொழில்துறை தகமைக்கான சட்டக் கல்வியை வழங்கும் அதி உயர்ந்த ஒரே நிறுவனமாகிய இலங்கை சட்டக்கல்லூரியின் நுழைவுப் பரீட்சையில் சித்தியடைவதன் மூலம் இலங்கைச் சட்டக் கல்லூரியில் கற்று உயர்தொழில் துறைகளில் ஒன்றான சட்டத்தரணியாகலாம்.

தகைமைகள் :-

- எந்த துறையாயினும் க.பொ.த உயர்தரத்தில் (A/L) புதிய பாடத்திட்டமாயின் ஒரே தரத்தில் 3 பாடங்களிலும் சித்தி (3S) பழைய பாடத்திட்டமாயின் 4 பாடங்களிலும் சித்தி (4S) .
- க.பொ.த் சாதாரணதரத்தில் (O/L) ஆங்கிலம் மற்றும் தமிழ்/சிங்களத்தில் திறமைச்சித்தி (C).
- வயது எல்லைகிடையாது.

### யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக

சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சைக்கான வழிகாட்டி வகுப்புக்களை கொழும்பில் நடாத்தி வரும் பல வருட அனுபவம் மிக்க சட்டத்தரணிகள், சட்டக்கல்லூரி விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர்கள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்களுடன் இணைந்து நடாத்தப்படுகின்றது.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் விரிவுரைகள் நடாத்தப்படும்.

தங்கள் பதிவுகளை 31.01.2009 (சனி) , 01.02.2009 (ஞாயிறு) ஆகிய தினங்களில் நேரடியாக பின்வரும் முகவரியில் மேற்கொள்ளலாம். (பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன)

No: 01, Brown Road, Navalar Road Junction, Jaffna.

Tell : 021-222-7646
E.Mail : afle@gmail.com


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன.30

மீசாலை கிழக்கு பட்டையோலிச்சி வீரபத்திரர் ஆலய மாணவாளக்கோல சங்காபிஷேகம் எதிர்வரும் ஐந்தாம் திகதி நடைபெறும். (202- 207)

* * * * * *

ஏழாலை தெற்கு, களவோடை வசந்த நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் மஹோற்சவ உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழா, 7அம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழா, 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா, 9ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * * * * *

தெல்லிப்பழை அளவெட்டி கணேஸ்வரீம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய தை மாத சதுர்த்தி திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு விசேட பூசையுடன் இடம்பெறவுள்ளது.

இதேவேளை- இந்த ஆலயத்தின் மணவாளக் கோல விழா நாளை சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு 108 கலச அபிசேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை என்பவற்றைத் தொடர்ந்து ஊஞ்சல்பாட்டு இடம்பெற்றும். 12 மணியளவில் சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (202-86)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான சர்வதாரி வருடம் தை மாதம் 18ஆம் நாள் (31.01.2009) சனிக்கிழமை பிற்பகல் 12.57 முதல் 2.33 மணிவரையுள்ள இடப லக்கினமும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு. திருமதி பத்மராசா புவனேஸ்வரி தம்பதியரின்
சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**திலீபன்** அவர்களுக்கும்



திரு.திருமதி சிவயோகம் நகுலேஸ்வரி தம்பதியரின்
கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**இளமதி** அவர்களுக்கும்

திருவருளும் குருவருளும் கைகூட அன்பும் அறமும் சேர சுற்றமும் நட்பும் சூழ கன்னிகாதான மாங்கல்யதாரணம் **வண்ணை காமாட்சி அம்பாள் தேவஸ்தான மாரியம்மன் மண்டபத்தில்** (நாச்சிமார் கோயில்) நடைபெற பெரியோர்கள் நிட்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம்: 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை மணமகன் இல்லத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திருமதி பத்மராசா புவனேஸ்வரி,
திரு.திருமதி முரளீதரன் உஷா குடும்பம்,
பிரதான வீதி, சங்கானை.



திரு.திருமதி சிவயோகம் நகுலேஸ்வரி குடும்பம்,
34, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(இரு வீட்டார் அழைப்பு)

*(82167)



# PC HOUSE PRIVATE LIMITED

இல 01, கெ. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலை பேசி: 021 2224039 பக்ஸ்: 021 2226671

கணனி, கணனிசார் உபகரணங்களை விநியோகிப்பதில் இலங்கையில் முன்னணி நிறுவனமான

## PC HOUSE (PVT) LTD இன்

யாழ்பாணக் கிளை வெற்றிகரமாக தனது 7வது ஆண்டில் காலடி பதித்து தன்னிகரற்ற சேவையினை யாழ் மக்களிற்கு வழங்கி வருகின்றது.



### Branded Dell PC

Intel Pentium Dual Core
2.0GHz Processor
Intel DG 31 PR
80GB Sata Hard Disk
1Gb DDRII Memory / ATX Dell
16" LCD Dell Monitor
DVD Writer
1.44MB Floppy drive
USB Keyboard
USB Mouse Optical Genius
Internal Speaker

**Price Rs.74,000/=**

Free bitdefender anti-virus guard



### Student PC

Intel Celloron Dual Core
1.8GHz Processor
Intel G31 Chipset Mother Board
160GB Sata Hard Disk
1Gb DDRII Memory / ATX LGA
15" LCD Monitor
DVD Rom
PS2 Keyboard Multimedia
PS2 Mouse Optical
Speaker

**Price Rs.40,000/=**

Free bitdefender anti-virus guard



### Home PC

Intel Celloron Dual Core
2.2GHz Processor
Intel G31 Chipset Mother Board
160GB Sata Hard Disk
1Gb DDRII Memory / ATX LGA
15.6" LCD Monitor
DVD Writer
PS2 Keyboard Mutimedia
PS2 Mouse Optical
Speaker

**Price Rs. 44,750/=**

Free bitdefender anti-virus guard



### Laptops

MSI U100
Intel Atom 1.6Ghz / 1GB Ram / 80GB HDD
10 TFT Screen / wi-fi/Bluetooth / web cam
Windows XP Home
**RS:59,900/=**

HP Compaq 793TU
Dual Core 1.86GHz / 1GB Ram / 120GB HDD
15.4 Ultra Bright Screen /wi-fi /Bluetooth
DVD+RW / Web Cam / Card Reader
**Rs:75,000/=**

DELL Vostro 1510 924D
Intel Core 2 Duo 2.0GHZ / 2GB Ram
160GB HDD / 15.4 Ultra Bright Screen
wi-fi / Bluetooth / DVD+RW LIGHT SCRIBE
Web cam
**Rs:99,000/=**

Free bitdefender anti-virus guard

'கவர்ச்சிகரமான விலைக் குறைப்பு' 'வாடிக்கையாளர் மனம் கவர்ந்த பொருட்கள்' 'திருப்திகரமான சேவை'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிராமணக் கட்டுக்குள பகுதியில் கழிவுகளால் துர்நாற்றம்; மக்கள் அவதி

## நடவடிக்கை எடுக்க ஆணையாளர் உறுதி

யாழ்ப்பாணம்,ஜன.30

நல்லூர் பிராமணக்கட்டுக்குளச் சுற்றுப் பிரதேசத்தில் கழிவுகள் கொட்டப்படுவதால் அக்குளமும் அதன் சுற்றுச் சூழலும் மாசடைந்து காணப்படுகின்றன. இதனால் அப்பகுதியில் வாழும் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குளத்தின் அருகில் உள்ள கால்வாயினுள் அதன் அருகில் உள்ள நிலையம் ஒன்றின் கழிவுகள் சேர்க்கப்படுவதனால் அக்கால்வாயில் சேறு தேங்கி நிற்பதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது. இதன் காரணமாக அருகில் வசிக்கும் மக்கள் தமது கிணற்றுநீரைத் தேவைகளுக்குப் பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுவதாகவும் தமது தேவைகளுக்கான நீரைப் பெறுவதற்குச் சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள சிவன் கோயிலுக்குச் சென்றே நீரைப் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்த யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவவிடம் கேட்டபோது தாம் உடனடி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (7-6)




# இறந்த மிருகங்களில் தெள்ளின் பெருக்கம்: இதனால் ஒருவகைக் காய்ச்சல் பரவுகிறது

யாழ்ப்பாணம்,ஜன.30

குடாநாட்டில் இறந்த மிருகங்களில் இருந்து பெருகும் தெள்ளினால் ஒருவகையான காய்ச்சல் பரவுவதாகச் சுகாதார சேவைப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாகப் பல ஆயிரக்கணக்கான மிருகங்கள் இறந்து நீருடன் அள்ளப்பட்டுச் சென்றமை தெரிந்ததே.

இறந்த மிருகங்களை உரியமுறையில் அடக்கம் செய்யாமையால் அவற்றின் மூலம் ஒரு வகையான தெள்ளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தத் தெள்ளின் மூலம் ஒருவகையான காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுமக்கள் இறக்கும் மிருகங்களை வீதிகளிலும் மற்றும் இடங்களிலும் வீசாது உரியமுறையில் புதைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இறக்கும் மிருகங்களைப் புதைக்காது வெற்றுக்காணிகள், பொது இடங்களில் வீசுவதன் மூலம் தெள்ளுகள் பெருகிப் பொதுமக்களின் நோய்த்தாக்கத்திற்கு காரணமாக அமையமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (202-68)



வடமராட்சி வலயத்தின் பாடசாலைகளின் வெளிவாரி மதிப்பீட்டில் முதலாம் இடத்தை (1ஏபி1சி) தட்டிச் சாதனை நிகழ்த்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலைக்கான பரிசிலை வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராசா பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசனிடம் கையளிக்கிறார். யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தம்பதியர் அருகில் இருக்கின்றனர். *(218)*

# கோப்பாய் மத்தி, வடக்குப் பிரதேசங்களில் விவசாயக் கிணறுகள் புனரமைக்கப்படவில்லை

கோப்பாய்,ஜன.30

கோப்பாய் மத்தி, வடக்கு ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயக் கிணறுகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளன என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் வெள்ளநீர் உட்புகும் நிலை ஏற்படுவதுடன் கால்நடைகளும் தவறி விழும் சம்பவங்களும் அடிக்கடி ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினாலும் பெருமளவு வெள்ள நீர் உட்புகுந்து கிணற்றின் உட்பகுதிச் சுவர்களை அரிப்பிற்குள்ளாக்கி உள்ளன. இதன் காரணமாகக் கிணறுகள் தூர்வடையும் நிலையை அடைந்துள்ளன. இவற்றினை விரைந்து திருத்தி உதவ சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் முன்வரவேண்டுமென விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202-72)

# தென்மராட்சியில் வீதிகள் பலவும் சேதம்

யாழ்ப்பாணம்,ஜன.30

அண்மையில் பெய்த 'நிஷா' புயலினாலும் பெருமழையாலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதிகள் பலவும் சேதமடைந்து காணப்படுகின்றன.

சாவகச்சேரி-பருத்தித்துறை வீதியில் சரசாலைக்கும் கப்பூதுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள வீதியின் இருபக்கங்களும் நீரினால் அடித்துச் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. வீதியில் மண் கரைந்து செல்லாதவாறு இருபக்கமும் சிமெந்தினால் சுவர் கட்டப்பட்டிருந்தது. தற்பொழுது வீதியின் இடையிடையே சிமெந்துக் கட்டுகள் சேதமடைந்து வீதியிலுள்ள மண் நீரினால் அள்ளப்பட்டு சிதைவடைந்து பல இடங்களிலும் காணப்படுகிறது.

இதேவேளை - இந்த வீதியில் பிரதான சிறிய பாலங்கள் செப்பனிடப்படாமல் தற்காலிக வீதியமைக்கப்பட்டு காணப்படுவதானது மழைகாலங்களில் இந்தச் சிறிய மதகினூடாகக் கிராமப் புறங்களில் இருந்து சேரும் வெள்ளம் வீதியைக் கடந்து செல்லப் பெருந்தடையாகக் காணப்படும் எனப் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சரசாலை இல்லாரை வயல் வெளியில் நெற்பயிரை வெள்ளம் மூடி நெற்பயிர்கள் அழிவடையக் காரணமாகியிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள் மழைகாலம் தொடங்குமுன்னர் இந்தப் பாலங்களைச் செப்பனிடல்வேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (202-131)

# தேடல்கள் மூலம் சுயகற்றல் முறையை மேற்கொள்வதே மாணவருக்குச் சிறப்பானது

## கரவெட்டிக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

தேடல்கள் மூலம் சுயகற்றல் முறையை மேற்கொள்வதே மாணவர்களுக்குச் சிறப்பானது. புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் தமது கல்வியைத் தளரவிடாது கற்று ஏனையவர்களுக்கு உதவியுள்ளவர்களாக, மனிதநேயம் உள்ளவர்களாக வாழவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் கரவெட்டி கல்விக்கோட்டப் பணிப்பாளர் க.அம்பலவாணர்.

கடந்தாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ. சங்க அலுவலக மண்டபத்தில் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மேலும் உரையாற்றுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு:

இந்த ஆண்டு மேற்படி சங்க எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் 77 மாணவர்கள் சித்தியடைந்தமையும், மேற்படி சங்கம் இந்த மாணவர்களுக்குப் பரிசில் வழங் கிக் கௌரவிப்பதும் வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இந்த மாணவர்களின் முயற்சிக்கு பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் உதவியாக இருத்தல்வேண்டும் - எனக் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கனுவில் கிளைக்குழுத் தலைவரும் ஓய்வுபெற்ற காணிப் பதிவாளருமாகிய சி.செல்வரத்தினமும் கௌரவ விருந்தினர்களாகப் பாடசாலைகளின் அதிபர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சித்திபெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்கள் வழங்கினார்கள். கல்வியைத் தொடரமுடியாமல் இடர்படும் இரு மாணவர்களுக்குக் கல்வி நிலையம் ஒன்றின் இயக்குநர் சி.விமலராசாவால் பணப்பரிசில் வழங்கப்பட்டது. (203-201)




# ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற விரும்பும் வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

## சுகாதாரப் பணிப்பாளர் கேட்டுள்ளார்

யாழ்ப்பாணம்,ஜன.30

தற்போது இயங்காத நிலையில் உள்ள பல வைத்தியசாலைகளை மீளவும் இயக்கவேண்டிய தேவை ஏற்படலாம். இதனைக் கருத்தில்கொண்டு யாழ்.மாவட்டத்தில் இயங்கும் வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் வைத்தியர்கள் மீளவும் சேவையாற்ற விரும்பினால் யாழ்.பிராந்தியப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ்.பிராந்தியச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நிறுவனத் தலைவர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடலில் உரையாற்றும்போது அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வன்னியில் இருந்து மக்கள் யாழ்.மா வட்டத்துக்கு நாளாந்தம் வருகை தந்தவாறு உள்ளார்கள். இவர்களுக்கான இடைத்தங்கல் முகாமொன்று மிருசுவில் தேவாலயத்தில் இயங்கி வருகிறது. சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்தியர்கள் இவர்களைப் பராமரித்து வருகிறார்கள். காயப்பட்டவர்களை இவ்வைத்தியசாலைகளின் அம்பு [illegible] பராமரிக்கப்படுகிறார்கள்.

யாழ்.மாவட்டத்தில் சுமுகநிலை உருவாகி மக்கள் தத்தமது இடங்களில் மீளவும் குடியேறினால் இதுவரை இயங்காத நிலையிலுள்ள பல வைத்தியசாலைகளை மீளவும் திறக்கவேண்டிய நிலை ஏற்படலாம். இதனால் வைத்தியர்களின் சேவை மேலும் தேவைப்படலாம். எனவே இவ்வைத்தியசாலைகளை இயங்க வைப்பதற்குச் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள வைத்தியர்கள் விரும்பினால் அவர்கள் உடனடியாக யாழ். பிராந்திய சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்புகொள்ளலாம்.

போரினால் பாதிப்படைந்துள்ள வைத்தியசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டுமென சமூக சேவைகள் அமைச்சரிடம் எம்மால் முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளன. வடமராட்சியில் உள்ள வைத்தியசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை, அம்பன், மண்டைதீவு, மருதங்கேணி வைத்தியசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையை சுகாதாரத் திணைக்களத்தின்கீழ் கொண்டுவரும் யோசனை உள்ளது. தெல்லிப்பழைச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவைகள் முன்னுரிமையடிப்படையில் புனரமைக்கப்படவேண்டும். தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வரும் வட்டுக்கோட்டை பிரிவு வைத்தியசாலை மற்றும் அச்சுவேலி பிரிவு வைத்தியசாலை ஆகியவை விரைவில் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

யாழ்.பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரக் கிராமத்தில் சகல வசதிகளையும் கொண்ட பிராந்திய பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டும். இதற்கான போதியளவு நிலம் அங்குள்ளது என்றார். (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் மற்றும் சில பாடசாலைகளின் விவரம்

யாழ்ப்பாணம்,ஜன.30

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியதை அடுத்து பாடசாலைகளின் அதிபர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரங்களை 'உதயனு'க்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவற்றில் மற்றும் சில பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு:

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

**கணிதம்:** சி.தர்மதா- ஏபிசி.

**விஞ்ஞானம்:** சி.கோபிதா- பி2சி.

**கலை:** சி.சுபோதினி- 3ஏ, ம.துவாரகா- 3ஏ, து.ஜீவிதா- 2ஏபி, ஆர்.யாழினி 2ஏபி, சி.திவ்யாவந்தி- 2ஏபி, கே.நிரூபா- 2ஏபி, ஜெ.துஷாந்தி- ஏ2பி, எஸ்.கவிதா- ஏ2பி, கே.மயூரி- ஏ2பி, வை. அஜந்தினி- ஏ2பி, ரி.திருவருட்செல்வி- ஏ2பி, எஸ்.தனயாந்தினி-ஏ2பி.

து.செல்வவதனா- 2ஏசி, கே.நளினி- ஏபிசி, ஜே.தர்மதா-ஏபிசி, கே.மேகலா- ஏபிசி, வி.யாழினி-ஏபிசி, எஸ்.வனிதா- 3பி, செ.சுகன்யா- 3பி, எஸ்.றஜிதா- 3பி.

**வர்த்தகம்:** ப.பகீரதி- ஏ2பி, கி.மீரா- 3பி, எஸ்.பவிதா- 2பிசி, எஸ்.பிறேம்ஜா- 2பிசி.

**புற்றளை மகாவித்தியாலயம்**

**கலை:** இ.கிருஷ்ணப்பிரியா- 3ஏ, சோ.நிரோசா- ஏபிசி, வி.துர்க்கா- பி2சி, கே.அனுசாயினி- 2பிஎஸ், செ.கிருபா- சி2எஸ், நா.சிறீலதா- சி2எஸ்.

**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

**கலை:** சி.சரிகாசினி- ஏபிசி, வி. அனிதா- ஏபிஎஸ், சு.ரஜீவன்- 2பிசி, ச.சிந்துஜா- 2பிஎஸ், வி.யாழினி- பி2சி, ந.நளினி- பி2சி, ச. தர்சா- பிசிஎஸ், த. இளவரசன்- 3சி, தி.நிந்துஜா- 3சி.

**அருணோதயக் கல்லூரி**

**கலை:** டு.யஸ்மின் கிறிஸ்ரெலா- 2ஏபி, க.அபிராமி- 2ஏசி, ச.நிரோஸா- ஏ2பி, க.சாந்தினி- ஏபிசி.

**வர்த்தகம்:** கு.பிரியதர்சினி- ஏ2பி.

யே.ம.சூ.துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

இறைவன் துணையுடனும், ஆசியுடனும் எதிர்வரும் 2009 ஆம் ஆண்டு தைமாதம் 31ஆம்நாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு, யாழ்.பேராலய மணிகள் ஒலிக்க, பாடகர் குழாம் தூய ஆவியின் ஆசிர் வேண்டி இன்னிசை இசைக்க திருமணம் என்னும் திருவருட் சாதனத்தினால் இணைக்கப்படவுள்ள மணமக்கள்

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| பா.கிறிஸ்ரி அருள்ராஜன் | யோ.நேவிஸ்கொன்சலெற் |
| (ராஜன்) | (யூலி) |

ஆகியோரை வாழ்த்தி, ஆசீர்வதிக்க திருப்பலியில் செபிக்கவும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து யாழ்.அச்சக வீதியில் அமைந்துள்ள **"பாதுகாவலன் திருமண மண்டபத்தில்"** நடைபெறவுள்ள மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| **திரு.திருமதி பாக்கியநாதன்** | **திருமதி யோசேப்பு சுகிர்தமலர்,** |
| இல.17/1, மத்தியூஸ் வீதி, | இல.11, அச்சக வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(இரு வீட்டார் அழைப்பு) (82171)

## மாணவர்களிடையே போட்டிகள்

மண்டுவில், ஜன.30

வண்ணை - சாந்தையர் மடம் அபிவிருத்திக் கழகம் பாடசாலை மாணவர்களிடையே சைவசமய அறிவை மேம்படுத்தும் பொருட்டு போட்டிகளை நடத்தவுள்ளது.

சைவசமய சம்பந்தமான போட்டிகளுடன் மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், கோலம் போடுதல் போன்ற கலாசாரப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை இன்று வெள்ளிக்கிழமை 'சைவ சமய அபிவிருத்திக் கழக அறிவகம்', 82, நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (202-59)

## நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்



அளவெட்டி பாரதி சன சமூக நிலையத்திற்கு 2008ஆம் ஆண்டு உதவித்திட்டத்தில் கொம்பியூட்டர் ஒன்றும், சன சமூக நிலையத்திற்கு மின் இணைப்பும் வழங்கி உதவிய கௌரவ அமைச்சர்

**மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா ஐயா**

அவர்களுக்கும் இந்த உதவி கிடைக்க ஆவணப்படுத்தி உதவிய வலி.வடக்குப் பிரிவு தோழர் திரு.வேலவன் அவர்களுக்கும் எமது மனமார்ந்தநன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (82165)

**பாரதி சன சமூக நிலைய நிர்வாகமும், மக்களும்.**

**அளவெட்டி கிழக்கு, கும்பழை.**





இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0112334603

அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

ஏக விநியோகஸ்தர்கள்:

ஸ்ரீ வா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


உ

## சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு
### (குருப்பட்டமளிப்பு வைபவம்)

நிகழ்வுறும் மங்களமிகு சர்வதாரி வருஷம் தைமாதம் 19ஆம் நாள் (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை ரேவதி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினத்தில் **நல்லூர் வைரவர் கோயில் சிவஸ்ரீ கந்ததாசக் குருக்களின் பேரனும் கோண்டாவில் சிவபூதவராயர் கோயில் திருஞானசம்பந்தக் குருக்கள் தம்பதியரின் மகனும் புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ண சர்மா தம்பதியரின் மருமகனும் ஏழாலை அத்தியடி விநாயகர், ஏழாலை இலந்தை கட்டி ஸ்ரீ பாதாள வைரவர், கோண்டாவில் டிப்போ ஞான வைரவர் கோயில் ஆகியவற்றின் குருவாக விளங்கும்**

**ஷடமர்சன கோத்திர பிரம்மஸ்ரீ தி.சோமநாத சர்மா** அவர்களுக்கு சமய, விஷேட, நிர்வாண தீட்சையும் ஆசாரிய அபிஷேகமும் ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறத் திருவருள் கிட்டியுள்ளது. அந்தணப் பெருமக்கள், உறவினர்கள், நண்பர்கள், சைவப்பெருமக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தும் வாழ்த்தியும் குரு ஆசி பெற்று விருந்துபசாரத்திலும் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

தீட்சாகுரு: "கலாநிதி" சிவ ஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் (J.P.), (நல்லை ஆதீன சிவாச்சாரியார்).

அனைவரது நல் வரவையும் விரும்பும்:

**பிரம்ம ஸ்ரீ தி.சோமநாதசர்மா (கன்னைன் ஐயா குருக்கத்தினரும்), ஏழாலை அத்தியடி விநாயகர் தேவஸ்தானமும்.**

# பாடசாலை வீதி புனரமைப்பு

கோப்பாய், ஜன.30

நீர்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை வீதி, வலி.கிழக்கு பிரதேச சபையால் மீள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாடசாலை சென்று வரும் மாணவர்களின் சிரமம் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதியைச் செப்பனிடுவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(202-72)

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து




நவநீதன்- சாதினி தம்பதியரின் செல்வப் புதல்வன் ரக்சன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (30.01.2009) வெள்ளிக் கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். ரக்சனை அன்பு அப்பா, அம்மா மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பாட்டிமார், சித்தப்பா (சித்தா), பெரியத்தை, சின்னத்தை, ஆசையத்தை, மாமாமார், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணா (ஜேர்மனி), மச்சாள் (கனுஷி- லண்டன்) மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் நல்லூர்க்கந்தன் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (82222)

தகவல்: குடும்பத்தினரும், அப்பப்பாவும். இல. 15/7, முருகேசர் வீதி, நல்லூர்.

## கேள்வி அறிவித்தல்- இல.02
### கட்டடங்கள் திணைக்களம்
### வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்

01. செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேச ஸ்தாபனத்திடமிருந்து சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், யாழ்ப்பாணம் அவர்கள் கீழ்வரும் வேலைகளுக்காக நன்கொடையொன்றைப் பெற்றுள்ளார்.

02. பிராந்திய பணிப்பாளர், சுகாதாரசேவைகள், யாழ்ப்பாணம் சார்பாக தலைவர், மாவட்டக் கொள்ளல் குழு, அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அவர்களால் தகுதிவாய்ந்த சகல கேள்விதாரர்களிடமிருந்தும் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்வரும் வேலைக்கான மூடிய கேள்விகள் 02.03.2009 பிற்பகல் 2 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த வேலை விவரம் | இக்ராட் தரம் | வேலைக்கான ஆகு செலவு ரூபா | கேள்விப் பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | JF/BD/GA/HS/04/2009 | வைத்தியர்களுக்கான விடுதி நிர்மாணித்தல் மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை. | M5/C6 | 16.09Mn | 193,200.00 | 1000.00 |

03. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.

I. மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிட்ட ICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

II. ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.

IV. ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்க வேண்டும்.

V. கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக அலுவலக நேரத்தில் பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா) யாழ்ப்பாணம் (தொ.இல. 021- 222 2632 ) பரிசீலிக்க முடியும்.

05. கேள்வி ஆவணங்களை 30.01.2009 தொடக்கம் 26.02.2009 பிற்பகல் 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணம் (அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (வ.மா), யாழ்ப்பாணத்தில் செலுத்தி அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

06. இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்ட பொறி வைக்கப்பட்ட கேள்விகள் உரிய கேள்விப்பிணையுடன் தலைவர், மாவட்ட கொள்ளல் குழு, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 02.03.2009 பிற்பகல் 2 மணிக்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். கேள்வியின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விவரம் குறிப்பிடப்பட வேண்டும். உடனடியாகக் கேள்வி திறக்கப்படும். இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

07. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவினங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், (வ.மா.),
யாழ்ப்பாணம்.

**க.கணேஷ்,**
தலைவர்,
மாவட்டக் கொள்ளல் குழு/
அரச அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாடுகள், மனித உரிமை அமைப்புகளின் மௌனம் அனைத்து மக்களும் அழியும் வரை தொடருமா?

## நீதி சமாதான ஆணைக்குழு கவலையுடன் கேள்வி

யாழ்ப்பாணம்,ஜன.30

வன்னியில் எமது மக்கள் படும் சொல்லொணா வேதனைகள் குறித்துச் சர்வதேச நாடுகள், மனித உரிமை அமைப்புகள் காத்துவரும் மௌனம் எம்மைத் தாங்கொணா வேதனையில் ஆழ்த்துகின்றது. அனைத்து மக்களும் அழியும்வரை இவர்களின் மௌனம் தொடரப் போகின்றதா?

இவ்வாறு கவலையுடன் வினா எழுப்புகின்றது யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு.

வன்னியில் தொடரும் மனிதப் பேரவலத்தை நிறுத்தக்கோரி யாழ்.மரியன்னை பேராலயத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான தொடர் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து மேற்படி அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

'வன்னியில் நிகழும் மனிதப் பேரவலத்தை நிறுத்துக' என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ்.மறை மாவட்ட ஆயர் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் மற்றும் அனைத்துச் சமூக, சமய அமைப்புகள் இணைந்து யாழ்.தூய மரியன்னை பேராலய வளாகத்தில் தொடர் உண்ணாவிரத முன்னெடுப்பை ஆரம்பித்திருக்கின்ற இந் நாளில் தங்களுக்கு அறியத்தருவது.

வன்னி நிலப்பரப்பில் கடந்த பத்து நாள்களில் 400க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டும் (ஒருநாளில் மட்டும் 300க்கும் அதிகமானோர்), 1400 பேருக்கு மேற்பட்ட பொதுமக்கள் காயப்பட்டும், ஊனமாக்கப்பட்டும் உள்ளார்கள். காயப்பட்டவர்களுக்கான போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையாலும் மற்றும் வேறு மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்லப் படமுடியாத நிலையிலும் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கின்றன.

இறந்துபோன பலரின் உடலங்கள் தொடர்ச்சியான கடும் ஷெல் தாக்குதல்களினால் இறுதிச்சடங்குகள் கூடச் செய்ய முடியாத ஓர் அவலநிலை. மேற்சொல்லப்பட்ட தரவுகள் யாவும் பதிவுசெய்யப்பட்டவை மட்டுமே. இவற்றைவிட இன்னும் பலர் இறந்தும், காயப்பட்டும் இருப்பது அறிய முடிகிறது. எமது மக்கள் எந்தவேளையிலும் அச்சம் பீடித்தவர்களாகத் தற்காலிக பதுங்கு குழிகளுக்குள் தமது அன்றாட வாழ்வைக் கழிக்கிறார்கள். உண்ண உணவும், ஏனைய அத்தியாவசியத் தேவைகளும் இன்றி அவர்கள் பேரவலத்துள் வாழ்கிறார்கள்.

இந்நிலையில் சர்வதேச நாடுகள், மனித உரிமை அமைப்புகள் காத்துவரும் மௌனம் எம்மைத் தாங்கொணா வேதனையில் ஆழ்த்துகிறது. அனைத்து மக்களும் அழியும்வரை இவர்களது மௌனம் தொடரப் போகிறதா?

ஆகையால் உண்ணாவிரதிகளாகிய நாம் அனைவரும் இணைந்து உங்களிடம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறோம்.

* வன்னியில் நிலவும் மனித பேரவலத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்புகளை வேண்டி நிற்கின்றோம்.
* நாம் அனைவரும் இப்போருக்கு எதிரானவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறோம்.
* நீதியான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்து பேச்சுவார்த்தை மூலம் அமுல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களையும் வேண்டிநிற்கிறோம். (202-51)

# மானிப்பாய் வைத்தியசாலைக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

நவாலி,ஜன.30

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு நோயாளர்களின் நன்மை கருதி சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான, ஆவி பிடிக்கும் இயந்திரம், இரத்த அழுத்தம் (Pressure) பார்க்கும் நவீன கருவி, இரத்தப் பரிசோதனை செய்யும் கருவி என்பன வழங்கப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தையா வைத்தியசாலை பொறுப்பதிகாரி பத்மராணி ஏகாம்பரமூர்த்தியிடம் கடந்த திங்கட்கிழமை இந்த உபகரணங்களைக் கையளித்துள்ளார்.

இந்த நலன்விரும்பியின் இச்சேவையினை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினரும் அப்பிரதேச மக்களும் பாராட்டியுள்ளனர். (202-100)

# ஐ.நா. பிரகடனங்களை அமுல்படுத்தினாலேயே இலங்கைக்கு இனிமேல் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை

கொழும்பு,ஜன.30

''இலங்கை ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை நிரூபித்தாலே ஜி.எஸ்.பி. வரிச்சலுகைகள் கிடைக்கும்.'' - என பிரஸல்ஸிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவிடம் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்களுக்கு உயிரிழப்புகள் ஏற்படுவது மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசுக்கு எவ்வித தொடர்பும் இல்லை எனவும், இலங்கையைத் தரமிறக்குமளவிற்கு எவ்வித மீறல்களும் இடம்பெறவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சர் பிரஸல்ஸில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அநேக விசாரணைகள் முடிவடைந்துவிட்டன என்றும் வன்னியில் அரசு அமைத்துள்ள பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (அ-சி)

# நாடளாவிய ரீதியில் விமர்சையாக இம்முறை சுதந்திரதினக் கொண்டாட்டம்

கொழும்பு,ஜன.30

இலங்கையின் 61 ஆவது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு நாட்டில் அனைத்து அரச கட்டடங்களையும் அலங்கரிப்பதுடன் கட்டடங்களில் தேசியக் கொடியைப் பறக்க விடுவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

பெப்ரவரி மாதம் 3 ஆம், 4ஆம் திகதிகளில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்கா சகல திணைக்களத் தலைவர்களுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய மட்டத்தில் பிரதான வைபவம் ஒன்று ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளதுடன், மாவட்ட மட்டத்திலும், பிரதேச ரீதியாகவும் விசேட வைபவங்களை நடத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை 61ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், கலை, கலாசார நிகழ்ச்சிகளையும், விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளையும் நடத்துவதற்கான ஒழுங்குகளை பொது அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்திய ஆடைகள், அழகியல் பொருள்களின் கண்காட்சியை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் திறந்துவைப்பதையும் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ஐங்கரவேல் உட்பட உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)

## கொக்குவில் இந்து மயானத்தில்

# இறுதிக்கிரியை செய்ய வருவோரிடம் பணம் அறவிடப்படுவதாக மக்கள் கவலை

யாழ்ப்பாணம்,ஜன.30

கொக்குவில் இந்துமயானத்திற்கு இறுதிக்கிரியைகள் செய்யச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இறுதிக்கிரியைகளை மேற்கொள்வதற்காகப் பிரதேச சபையில் பணம் செலுத்தப்படுகின்றபோதிலும் மயானத்தில் கடமையாற்றுபவர்களுக்கும் பணம் செலுத்தினால் மட்டுமே உடலத்தை எரிக்க செய்யப்படும் என்ற நிலை காணப்படுவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மயானத்தின் சீரான செயற்பாட்டுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும் தற்போது ஒருசிலர் கட்டாயப்படுத்துவதால் பொதுமக்கள் பாதிப்படைகின்றனர் என்று கூறப்படுகின்றது.

நல்லூர் பிரதேச சபையும், கொக்குவில் இந்துமயான அபிவிருத்திச் சபையும் இதில் உரிய கவனம் எடுத்து மயானத்தில் பணம் அறவிடும் நிலையை நிறுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (86)

# அதிபர் சேவை தரம் 2:II பதவிக்கு நியமனம் பெற்றவர்களுக்குக் கடிதம்

அச்சுவேலி,ஜன.30

இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிபர்களுக்குக் கல்வி அமைச்சு நியமனக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

அதிபர் பதவி உயர்வு 01.12.2008ஆம் திகதியில் இருந்து நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.டி.பண்டாரவின் ஒப்பந்தத்துடனும் மேலதிக செயலாளர் கே.மொகமட் தம்பியின் கையொப்பத்துடனும் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்துடன் வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவின் கையொப்பத்துடன் கூடிய நியமனக் கடிதமும் இணைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 111பேர் அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். 36 பேர் யாழ்.மாவட்டத்தில் நியமனம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண கல்வி வலயத்திலிருந்து 15 பேர், வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து 7 பேர், வடமராட்சி கல்வி வலயத்திலிருந்து 6 பேர், தீவகம் கல்வி வலயத்திலிருந்து 5 பேர், தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து 2 பேர், கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியிலிருந்து ஒருவரும் நியமனம் பெற்றுள்ளனர்.

இந்த 36 பேரில் உயர்புள்ளி அடிப்படையில் நான்கு பேர் தேசியப் பாடசாலை அதிபர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அதிபர் நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் இவர்களுக்கான பாடசாலைகள் குறித்தொதுக்கப்பட்டு வழங்கப்படவில்லை.

இலங்கை அதிபர் சேவைக்கான தெரிவு நடைமுறையினால் பாதிக்கப்பட்டவர்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கின் தீர்ப்பினை எதிர்பார்த்து பாடசாலைகள் வழங்குவது தாமதப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (202-11)

# கஷ்டங்களின் மத்தியிலும் சிறப்புடன் செயற்பட்ட பிரதேச செயலக ஊழியர்களுக்குப் பாராட்டு

## யாழ்.அரச அதிபர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,ஜன.30

அரச நிர்வாக இயந்திரத்தின் அச்சாணியாகத் திகழ்பவை பிரதேச செயலகங்களே. இவை மக்களுக்கும், அரசுக்கும் தொடர்பை ஏற்படுத்துவதுடன் மக்களின் தேவைகளை அரச நிர்வாகத்துக்கு எடுத்துக்காட்டும் தகவல்களையும் வழங்குகின்றன.

இவ்வகையில் இன்றைய சூழலில் பல்வேறு வகைப்பட்ட கஷ்டங்களின் மத்தியிலும் சிறப்பாகச் செயற்பட்ட பிரதேச செயலகங்களுக்கும் அவற்றின் ஊழியர்களின் அர்ப்பணிப்பு, சேவை மனப்பாங்கு தொடர்பாகப் பாராட்டு தெரிவிப்பதுடன் நன்றியும் கூறுகிறேன் - என்று அரச அதிபர் கே.கணேஷ் குறிப்பிட்டார்.

வேலணைப் பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வேலணைப் பிரதேச சபையின் ஊழியர்கள் 2008ஆம் ஆண்டில் சிறந்த சேவையாற்றியுள்ளார்கள். அரச சேவையிலுள்ள ஊழியர்களின் ஊக்குவிப்புக்கு இவ்வாறான ஒன்றுகூடல் நிகழ்வுகள் பயன்தருபவையாகும். ஒன்றுகூடல் நிகழ்வுகள் மூலம் ஊழியர்களின் ஒற்றுமை பிறக்கும், கடந்த காலத்தில் ஏற்பட்ட தவறுகளை இனங்கண்டு திருந்துதல் எதிர்கால செயற்பாடுகளுக்கு நன்மை பயக்கிறது.



இந்நிகழ்விலே அலுவலகத்தின் அனைத்துத் தர ஊழியர்களும் சமூகமாகப் பங்குகொண்டு மகிழ்வுடன் காணப்படுவது சிறப்பான விடயமாகும். புதிய ஆண்டு தங்கள் எல்லோருக்கும் எமது நாட்டுக்கும் சாந்தியும், சமாதானமும் நிறைவானதாக அமையவேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன் - என்றார்.

இந்நிகழ்விலே வேலணைப் பிரதேச செயலர் நந்தகோபாலன் உட்படப் பலர் உரையாற்றினர். (202-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- " நம்பிக்கை என்பது வாழக்கையின் ஊன்றுகோல் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம் - 02
# EASY WAY TO ENGLISH

## Last week continuity.....

BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond)
Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)

## VERB

### 5. Simple Past Tense (சாதாரண இறந்த காலம்)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I walked நான் நடந்தேன் | You walked நீ நடந்தாய் | He walked அவன் நடந்தான் |
| Plural பன்மை | We walked நாங்கள் நடந்தோம் | You walked நீ நடந்தாய் | They walked அவர்கள் நடந்தார்கள் |

The verb in the simple Past often come before Adverb and Adverb Phrases. வினைச்சொல்லானது சாதாரண இறந்தகாலச் சொல்லாக வரும். அடிக்கடி வினையுடனோ வினையடைச் சொற்றொடருடனோ வரும்.

I walked Yesterday — நான் நேற்று நடந்தேன்.
I walked along the road — நான் றோட்டில் நேரே நடந்தேன்.
I walked last — நான் கடைசியாக நடந்தேன்.

இறந்தகால வாக்கியம் I இல் தொடங்கினால் அதனையொட்டி வரும் இறந்தகால வினைச்சொல் மாற்றமின்றி அப்படியே வரும். I read, I ate, I sang, I slept இதே போன்று முன்னிலை You இல் தொடங்கினாலும் இறந்தகால வினைச்சொல் அப்படியே வரும். You read, You ate, It sang, He slept இறந்தகாலத்தில் பன்மை (They) யாக வரும்போது, They read, They ate, They sang, They slept.

### Past Continuous Tense (இறந்தகாலத் தொடர்)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I was walking நான் நடந்து கொண்டிருந்தேன் | You were walking நீ நடந்து கொண் டிருந்தாய் | He was walking அவன் நடந்து கொண்டிருந்தான் |
| Plural பன்மை | We were walking நாங்கள் நடந்து கொண்டிருந்தோம் | You were walking நீங்கள் நடந்து கொண்டிருந்தீர்கள் | They were walking அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள் |

'The past continuous Tense is used to tell of an occurence that was taking place when another event took place.
இறந்தகாலத் தொடரானது, ஒரு சம்பவம் நடந்ததை அது இடம்பெற்ற இடத்தை அதே இடத்தில் வேறொரு செயற்பாடு நடந்ததைக் கூற பாவிக்கப்படுகிறது.

இறந்தகாலத் தொடரில்...

நான் நடந்தேன் என்பதை I walked என எழுதுகிறோம். நான் நடந்து கொண்டிருந்தேன் என்பதை எழுத வேண்டுமாயின் I was walking என எழுதப்பட வேண்டும்.

நடந்துகொண்டிருந்தேன் என்கிற பொழுது அச்செயல் இறந்த காலத்தில் தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருப்பதை விளக்குகிறது. இறந்தகாலத் தொடரில் Past continuous Tense தன்மைப் பன்மை (First Person Plural) எப்படி வாக்கியமாக அமைகின்றது என்பதைப் பார்ப்போம்.

We were walking
நாங்கள் நடந்து கொண்டிருந்தோம்.

➢ ஞாபகக் குறிப்பு:
**We were walk என எழுதுவதோ, சொல்வதோ முற்றிலும் தவறாகும்.**

"You" என்பது ஆங்கிலத்தில் ''நீ , நீங்கள்'' எனும் இரு கருத்தையும் கொள்ளும் You were walking நீ/நீங்கள் நடந்துகொண்டிருந்தீர்/கள் என பொருள் தரும் வாக்கியத்தில் முன்னிலை ஒருமை / பன்மையோ / helping verb ஆகி were இணைந்த வினைச் சொல்லுடன் ing இணையும்போது தொடர்ந்து நடப்பதை தெரியப்படுத்துகின்றது.

➢ ஞாபகக் குறிப்பு:
**You were walk என எழுதுவதோ, சொல்வதோ முற்றிலும் தவறாகும்.**

இறந்த காலத் தொடர் - படர்க்கை ஒருமை.
இறந்தகாலத் தொடர் வாக்கியத்தில் படர்க்கையாகிய He, She, It என்பவற்றுடன் இறந்தகால துணைவினைச்சொல்லையும் வினைச்சொல்லுடன் ing இணைந்து இறந்தகாலத் தொடர் படர்க்கை ஒருமை வாக்கியங்களை அமைக்கலாம்.

அவன் நடந்து கொண்டிருந்தான்.
He was walking.

அவள் நடந்து கொண்டிருந்தாள்.
She was walking.

அது நடந்து கொண்டிருந்தது.
It was walking.

அடுத்த இறந்தகாலத் தொடர் படர்க்கை வாக்கியம் பன்மையில் They உடன் இறந்தகால துணை வினைச்சொல் were யும் walk எனும் வாக்கியத்துடன் ing இணைந்து இறந்தகால தொடர் படர்க்கை பன்மை வாக்கியமாக அமைகின்றது.
They were walking – அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

➢ ஞாபகக் குறிப்பு:
**They were walk என எழுதுவதோ, சொல்வதோ முற்றிலும் தவறாகும்.**

### Past Perfect Tense (இறந்த கால வினைமுற்று)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I had walked நான் நடந்து முடித்து விட்டேன் | You had walked நீ நடந்து முடித்துவிட்டாய் | She had walked அவள் நடந்து முடித்துவிட்டாள் |
| Plural பன்மை | We had walked நாங்கள் நடந்து முடித்துவிட்டோம் | You had walked நீங்கள் நடந்து முடித்துவிட்டீர்கள் | They had walked அவர்கள் நடந்து முடித்துவிட்டார்கள் |

The past perfect Tense tells about a happening that took Place before a certain time in the past.
இறந்தகால வினைமுற்றானது ஒரு நடவடிக்கை குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பு நடந்து முடிந்துவிட்டது என்பதைக் குறிக்கிறது.

உ+ம் :
1. I had seen the film.
   நான் அந்த படத்தை பார்த்துவிட்டேன்.
2. She had taken the child.
   அவள் குழந்தையை எடுத்து விட்டாள்.

had எனும் சொல் மிகவும் முக்கியமானதாகும். இதனை மாணவர்கள் மிக கவனமாக ஆழ்ந்த சிந்தனையில் வைத்திருத்தல் அவசியமானதாகும். சில வாக்கியங்கள் இறந்த காலத்திற்கு இறந்த காலமாக நடைபெற்றதை கூற had பாவிக்கப்படும். உதாரணமாக சில வாக்கிங்களைப் பார்க்கும்போது I went home I finished my work. நான் வீட்டுக்குப் போனேன். நான் எனது வேலையை முடித்தேன். மேலே உள்ள வாக்கியம் இரண்டும் சாதாரண இறந்தகால வாக்கியங்களாகும்.

இவற்றில், நான் சில ஆண்டுகளுக்கு முன் வீட்டுக்குப் போனேன். நான் சில காலங்களுக்கு முன் எனது வேலையை முடித்துவிட்டேன். என்பவற்றை தெரிவிக்க அதாவது, இறந்த காலத்திற்கு இறந்த காலமாக had பாவிக்கப்படும்.

Past Perfect Continuous Tense is used for an action that began before a certain time and continued up to the time.

இறந்தகால தொடர் வாக்கியமானது ஒரு செயற்பாடு முதலிலும், கொஞ்சக் காலத்திற்கு பின்தொடர்ந்து நடைபெறுவதைக் குறிக்கும். இங்கு I என்பதுடன் Walk என்பதன் முன் Had been இணைந்து Walk-ing யையும் இணைத்து வாக்கியம் முடிவுறுகிறது. ஒரு வினைச்சொல் ing எனும் சொல்லுடன் முடியுமானால் அச்செயல் தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதைக் குறிக்கிறது. ஆனால், இங்கு காலம் (Tense) தெளிவாக தெரிகிறது. இச்செயலுடன் Had been என்ற சொல்லும் இணையும்போது, இறந்த காலத்தில் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதைக் குறிக்கிறது. இதுவே இறந்தகால வினைமுற்றுத் தொடராகும்.

### 1st Person – Singular – Past Perfect Continuous
### தன்மை - ஒருமை - இறந்தகால வினைமுற்றுத்தொடர்.

1. I had been reading the book.
   நான் புத்தகத்தை வாசித்துக்கொண்டேயிருந்தேன்.
2. I had been working in the office.
   நான் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டேயிருந்தேன்.
3. I had been collecting the Stamps.
   நான் முத்திரைகளை சேகரித்துக்கொண்டேயிருந்தேன்.
4. I had been writing a book.
   நான் புத்தகமொன்றை எழுதிக்கொண்டேயிருந்தேன்.

### 1st Person – Plural – Past Perfect Continuous
### தன்மை - பன்மை - இறந்தகால வினைமுற்றுத்தொடர்.

5. We had been reading the book.
   நாங்கள் புத்தகத்தை வாசித்துக்கொண்டேயிருந்தோம்.
6. We had been working in the office.
   நாங்கள் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டேயிருந்தோம்.
7. We had been collecting the stamps.
   நாங்கள் முத்திரைகளைச் சேகரித்துக்கொண்டேயிருந்தோம்.
8. We had been writing a book.
   நாங்கள் புத்தகமொன்றை எழுதிக்கொண்டேயிருந்தோம்.

➢ ஞாபகக் குறிப்பு:
மேலே தரப்பட்டுள்ள வாக்கியளங்களில் இறந்தகால வினைமுற்றுத் தொடர் வாக்கியத்திற்கும் ஒரே மாதிரியான தமிழ் வாக்கியம் அமைவதை அவதானியுங்கள். இவை ஏற்படக் காரணம், கொண்டிருந்து இருந்தோம், என தமிழில் பாவிக்கப்படாமையே இதற்குக் காரணமாகும்.
உ+ம்:
1. I was walking.
   நான் நடந்து கொண்டிருந்தேன்.
2. I had been walking.
   நான் நடந்து கொண்டேயிருந்தேன்.

### 2nd Person – Singular/Plural Past Perfect Continuous
### முன்னிலை - ஒருமை - பன்மை இறந்தகால வினைமுற்றுத்தொடர்.

9. You had been reading the book.
   நீ புத்தகம் வாசித்துக்கொண்டே இருந்தாய்
10. You had been working in the office.
    நீங்கள் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டே இருந்தீர்கள்.
11. You had been collecting the Stamps.
    நீங்கள் முத்திரைகளை சேகரித்துக்கொண்டே இருந்தீர்கள்.
12. You had been writing a book.
    நீங்கள் புத்தகமொன்றை எழுதிக்கொண்டே இருந்தீர்கள்.

### 3rd Person Singular – Past Perfect Continuous.
### படர்க்கை - ஒருமை - இறந்தகால வினைமுற்றுத்தொடர்.

13. He had been reading.
    அவன் புத்தகம் வாசித்துக்கொண்டே இருந்தான்.
14. She had been working.
    அவள் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டே இருந்தாள்.
15. It had been collecting.
    அது சேகரித்துக்கொண்டே இருந்தது.
16. He had been writing.
    அவன் எழுதிக்கொண்டே இருந்தான்.

➢ ஞாபகக் குறிப்பு:
[illegible] வாக்கியங்கள் He, She, It தொடங்கினால் அதற்கு வருகின்ற வினைச்சொல்லுடன் had என்பதையும் இணைத்து been உம் சேர்ந்து கொள்ளும்.

### Simple Future Tense (சாதாரண எதிர்காலம்)

| Number எண் | First Person தன்மை | Second Person முன்னிலை | Third Person படர்க்கை |
|---|---|---|---|
| Singular ஒருமை | I will walk நான் நடப்பேன் | You will walk நீ நடப்பாய் | He will walk அவன் நடப்பான் |
| Plural பன்மை | We will walk நாங்கள் நடப்போம் | You will walk நீங்கள் நடப்பீர்கள் | They will walk அவர்கள் நடப்பார்கள் |

To continue next week.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக ஆங்கிலப் பாடசாலைகள் அமைப்பது அவசியம்

ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சிறுவர்களின் நலன் பேணும் அமைப்பான 'யுனிசெவ்' நிறுவனம், 'கல்வி சிறுவர்களின் அடிப்படை உரிமை' என்று பிரகடனப்படுத்தியுள்ளது.

வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களைச் சமாளிக்கக்கூடிய வகையில் கல்வித்தரம் அமையவேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

ஒரு நாட்டின் கல்வித்தரத்தைக் கணிப்பதற்குக்கூட எழுத்தறிவு வீதத்தை அளவுகோலாகப் பயன்படுத்தும் நிலை மாற்றப்பட்டு மக்களின் கணனி அறிவையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்றும் உலகில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருகின்றன.

அதாவது இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் ஆங்கிலமொழியறிவும் கணனி அறிவும் குறைந்தவர்கள் படிப்பறிவு குறைந்த பாமர மனிதர்களாகவே எதிர்காலத்தில் கணிக்கப்படுவார்கள் என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**கல்வித்துறையும் ஆங்கிலமொழியும்**

இலங்கையில் பெரும்பாலான அரச பாடசாலைகளில் சர்வதேச மொழியாகிய, ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவே கற்




பிக்கப்படுகின்ற நிலையில் எமது குடாநாட்டுக் கிராமப்புற பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் ஆங்கில மொழியறிவு நீண்டகாலமாக எட்டாக் கனியாகவே இருந்து வருவதை எல்லோரும் ஏற்றுக் கொள்வர்.

அரச பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கிலமொழி ஆசிரியர் பற்றாக்குறையே இதற்குப் பிரதான காரணம் ஆகும். இதிலும் குறிப்பாகப் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத நிலையிலேயே பெரும்பாலான ஆரம்பப் பாடசாலைகள் குடாநாட்டில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே அடிப்படை ஆங்கிலமொழியறிவு குறைந்த நிலையிலேயே குடாநாட்டுக் கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் தமது இடைநிலைக்கல்வி, உயர் கல்வி என்பவற்றைத் தொடருகின்றனர் என்பது இதனால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆனால், இலங்கையின் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த எனைய பிரதேசங்களில் கூடுதலான தேசியப் பாடசாலைகள் (National Schools) சர்வதேசப் பாடசாலைகள் (International Schools) என்பன இயங்கிக்கெண்டிருப்பதனால் அங்குள்ள மாணவர்களின் ஆங்கிலமொழியறிவு மிகவும் உச்ச நிலையிலேயே உள்ளது என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை.

அத்துடன் இலங்கையின் தென்பகுதிக் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் ஆங்கில மொழியறிவை மேம்படுத்துவதற்காகத் தற்போது பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியான அரச ஆங்கிலமொழி மூலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

**ஆங்கிலமொழி மூலக் கல்வியும் குடாநாட்டு மாணவர்களும்**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்று பாடினான் மகாகவி பாரதி.

ஆகவே சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழியறிவு விருத்தி என்பது எமது தாய்மொழியாகிய தமிழ்மொழியறிவு விருத்திக்குத் தடையாக இருக்கும் என்று நாம் கருதமுடியாது. காரணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், வண.தனிநாயகம் அடிகளார் போன்ற பன்மொழி அறிஞர்களின் பாதச் சுவடுகள் பதிந்ததனால் பெருமை பெற்ற மண் இது.

விரைவாக மாறிவரும் விஞ்ஞான உலகில் மருத்துவம், பொறியியல், கணனி, சட்டம், கணக்கீடு, விஞ்ஞானம் போன்ற பல்வேறுபட்ட துறைகளில் எமது மாணவர்கள் மிளிர்வதற்கு அடிப்படை ஆங்கில மொழியறிவு அவசியம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.

ஆனால், குடாநாட்டுப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மாணவர்களின் ஆங்கிலமொழியறிவு விருத்திக்குரிய வாய்ப்பு வசதிகளில் பெரியதொரு ஏற்ற இறக்கம் காணப்படுவதை நாம் அவதானிக்கலாம். உதாரணமாக கிராமப்புறப் பாடசாலை மாணவன் ஒருவன் அடிப்படை ஆங்கிலமொழியறிவு குறைந்த நிலையில் பொதுப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அதேசமயம் நகரப் பாடசாலை மாணவன் ஒருவன் ஆங்கிலமொழி மூலமாக அதே பரீட்சைக்குத் தோற்றுகின்றான்.

அத்துடன் பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்தை ஆங்கிலமொழி மூலமாகக் கற்கும் மாணவர்களில் பலர் பின்பு அதே பாடத்தைத் தனியார் கல்வி நிலையங்களில் தமிழ்மொழி மூலமாகக் கற்றுக் குழம்பிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால் ஒரு கற்கைநெறியைக் கற்பதற்கு ஒரு ஊடகமொழி (Medium Language) பயன்படுத்தும்போது மட்டுமே மாணவர்களின் கிரகித்தல், தேடல்திறன் என்பன விருத்தி அடையும். இதனை விடுத்து ஒரு பாடத்தை ஆங்கிலமொழி மூலமாகவும் தமிழ்மொழி மூலமாகவும் மாறி மாறி கற்கும்போது தெளிவான விளக்கநிலை ஏற்படுதற்குப் பதிலாகக் கிரகித்தல், தேடல் திறன் குறைந்த ஒரு குழப்பமான நிலையே ஏற்படும்.

**ஆங்கிலமொழி மூலமாகக் கற்பித்தல்**

ஒரு பாடத்தை ஆங்கிலமொழி மூலமாகக் கற்பிப்பதற்கு ஆங்கிலமொழியறிவு மட்டும் போதாது. குறிப்பிட்ட பாடத்தை ஆங்கில மொழி மூலமாகக் கற்றவர்களால் மட்டுமே அதே பாடத்தை மாணவர்களுக்கு ஆங்கிலமொழி மூலமாக விளக்கமாகக் கற்பிக்கவும் முடியும். உதாரணமாக தரம் 10இல் ஆங்கிலமொழி மூலமாகக் கற்கும் மாணவர்களில் பலர் வரலாறு (History) என்ற பாடம் தொடர்வில் குழம்பிய நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

**பிரதேச செயலர் பிரிவுகளில் ஆங்கிலப் பாடசாலைகள்**

எதிர்கால வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களைச் சமாளிக்கக்கூடிய வகையில் கல்வி கற்பிக்கப்படவேண்டும் எனின் எமது குடாநாட்டுக் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் ஆங்கிலமொழியறிவு மேம்படுத்தப்படவேண்டும் என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கள் எதுவும் இருக்க முடியாது.

ஆனால் இலங்கையின் வடக்கு - கிழக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் ஆங்கிலமொழியறிவை மேம்படுத்துவதற்காகப் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியான அரச ஆங்கிலமொழி மூலப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை வகுப்புகளைக் கொண்ட இப்பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலமாகவே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

**குடாநாட்டு மாணவரின் ஆங்கிலமொழியறிவு இதன்மூலம் மேலும் வளர்ச்சிடையும்**

**சுப்பிரமணியம் சிவநேசராசன்**
ஆசிரியர்,
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சுதேச மொழி கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளில் இருந்தே மாணவர்கள்போட்டிப் பரீட்சை மூலம் குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவு ஆங்கிலமொழி மூலப் பாடசாலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆகவே இத்தகைய பாடசாலைகள் குடாநாட்டிலும் படிப்படியாகவேனும் அறிமுகப்படுத்தப்படவேண்டியது காலத்தின் அவசிய தேவை ஆகும். ✱



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற கால்கோள் விழாவில் வணபிதா.பி.எச். வசந்தகுமார் அடிகள் தரம் ஒன்றில் இணைந்த மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்குகின்றார். *(படம்: மண்டுவில் செய்தியாளர்)*



செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழாவில் எடுக்கப்பட்ட படம்.

சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் மங்கள விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் செல்வி கா.மாணிக்கம் மற்றும் ஆசிரியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். *(203)*



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் தரம் I, தரம் II மாணவ மாணவிகளின் கண்காட்சியையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் முன்னாள் அதிபர் க.நல்லையா, பாடசாலை அதிபர் செல்வி நா.ஜெயராணி, வலிகாமம் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் (தமிழ்) செல்வி எஸ்.க[illegible] சாலை ஆசிரியர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் [illegible] (20[illegible])




பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற க[illegible] மாணவர்களின் கலைநிகழ்வு இடம்பெற்றபோது எடுக்[illegible]ம். *(படம்: கர்ணன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணே சோம்பியிராது வீட்டுத் தோட்டம்செய்து விளைபொருள்களையும் வெற்றியையும் பெற்றவர்கள்

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம் யாழ்.மாவட்டத்தில் நடத்திய தோட்டப் போட்டியில் தனியார் வீட்டுத் தோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் தமது கருத்துக்களை உதயன் மூலம் பகிர்ந்துகொள்கிறார்கள்.

செல்வி சுதர்சினி, இயற்றாலை
*(தனியார் வீட்டுத் தோட்ட போட்டியில் முதலிடம் பெற்றவர்)*



கேள்வி: உங்களுக்கு ஏன் விவசாயம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது?

எங்கள் தந்தையார் சிறிய அளவில் வியாபாரம் செய்து வந்தவர். ஆறு பெண்களைக் கொண்டது எமது குடும்பம். தந்தையின் வியாபாரம் பெரியதாக இல்லை. எமது குடும்பத்திற்கு வருமானம் போதாது. எங்களிடம் விவசாயம் செய்யக்கூடியதாக நிலம் இருக்கிறது. நான் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் வியாபாரத்தால் பிரயோசனம் இல்லை தோட்டம் செய்வோம் என்று கூறினேன். அவரும் அதற்கு ஒத்துக் கொண்டார். அது இப்போது எங்களுக்கு நல்ல பயனைத் தருகின்றது. இன்று முழுநேர விவசாயக் குடும்பமாகிவிட்டோம்.

கேள்வி: முழுமையான விவசாயக் குடும்பம் என்பதில் பெருமைப்படுகிறீர்கள். வருமானம் எப்படி?

பதில்: பிரச்சினை இல்லை. 75 ஆயிரம் ரூபாவரை செலவு செய்கிறோம் என்றால் செலவுகள் எல்லாம் போக ஒன்று ஒன்றரை லட்சம் ரூபாவரை கிடைக்கின்றது. அப்பாவும் கூடவே இருந்து கொண்டிருக்கிறார். எங்களைப் பொறுத்தளவில் அதுவும் ஒரு பாதுகாப்புத்தானே?

கேள்வி: சகோதரிகள் பாடசாலைகளுக்கு போகிறார்களா? அப்படியெனின் விவசாய நடவடிக்கைகளுக்காக கூலித் தொழிலாளர்களை வைத்திருக்கிறீர்களா?

பதில்: சகோதரிகள் பாடசாலைக்குப் போனாலும் ஓய்வு விடுமுறை நேரங்களில் எங்களுடன் இணைந்து முழுமையாக உதவுகின்றார்கள். இப்போதெல்லாம் கூலி அதிகம். அதனால் மிகவும் கஷ்டமான வேலைகளுக்கு மட்டும் கூலிக்குப் பிடிப்போம். மற்றப்படி எல்லா வேலைகளையும் நாங்களே செய்கிறோம்.

கேள்வி: எந்தவகையான பயிர்களை செய்கைபண்ணுகிறீர்கள்?

பதில்: சோளன், குரக்கன் இவற்றை முக்கியமாகச் செய்கின்றோம். மரக்கறி வகைகளும் உண்டு. நெல் செய்கையும் சிறிய அளவில் உள்ளது.

கேள்வி: இப்போது மரக்கறிகள் விலை மிகவும் உச்சத்தில் உள்ளது. விற்பனைகள் எப்படி? விற்பனைக்காக எங்காவது எடுத்துச்செல்வதுண்டா?

பதில்: இப்போது எல்லாமே அதிகரித்த விலைதான். எமது உற்பத்திப் பொருள்களை கொடிகாமம் சந்தைக்கும் கொண்டு செல்வோம். வியாபாரிகளுக்கு ஏனைய விவசாயிகளைப் போன்றே கொடுக்கிறோம். தனியாக வீட்டுப் பாவனைக்காக வாங்குபவர்களுக்கு உச்சவிலைக்கு விற்பதில்லை. இன்றைக்குக் கஷ்டத்தில் உள்ள மக்களிடம் கூடுதலாக பணத்தை வாங்க எனக்கு விருப்பமில்லை. ஒரு நியாயமான விலையையே பெற்றுக்கொள்கின்றேன்.

கேள்வி: உங்கள் பொருள்களைக் குறைந்த விலையில் கொடுப்பதில் வீட்டில் எதிர்ப்பு ஏதாவது ?

பதில்: இல்லை. கஷ்டத்தை உணர்ந்தவர்கள் நாங்கள்.

கேள்வி: பொதுவாகவே இந்தப் பகுதியில் தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. நீங்கள் எப்படி சமாளிக்கிறீர்கள்? உரப் பாவனை எப்படி?

பதில்: எமது பகுதியில் வேம்படிக் குளம் உள்ளது. இந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் இதைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் போதிய நீரைப் பெறுவதில் கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கிறது. கிணற்றையும் பயன்படுத்துகின்றோம். இந்தக் குளத்துக்கு செல்லும் வீதியும் கொடிகாமம், இயற்றாலைக்கான எருவன் விவசாய வீதியும் மிகவும் மோசமாக உள்ளன. இவை இரண்டையும் புனரமைத்துத் தரும்படி உரியவர்களிடம் பல தடவைகள் கேட்ட போதும் கவனிப்பாரில்லை. இவற்றைச் சீர்செய்தால் விவசாயிகளுக்குப் பெரிய உதவியாக இருக்கும் என்பது என் கருத்து. உரத்தைப் பொறுத்தவரை சேதனப் பசளைதான். அதற்கான தொழில்நுட்பமுறைகளையும் கடைப்பிடிக்கின்றோம்.


கேள்வி: தனியார் போட்டியில் உங்களைவிட வயதில் மூத்தவர்களும் அனுபவம் மிக்க பலரும் கலந்துகொண்டிருந்தனர். குறைந்த வயதுடைய நீங்கள் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்.

பதில்: போட்டியில் முதலிடம் கிடைத்தது என்பதால் கலந்துகொண்ட பெரியவர்களையும் அனுபவஸ்தர்களையும் மிஞ்சிவிட்டேன் என்பதல்ல அர்த்தம். போட்டி விதிகள் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட்டதில் எனது புள்ளிகள் கொஞ்சம் கூடுதலாக இருந்திருக்கலாம் அவ்வளவுதான்.

கேள்வி: விவசாயத்தில் ஈடுபடுவது தொடர்பாக உங்களை ஒத்தவயதினருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.

பதில்: உள்ள வளங்களைப் பயன்படுத்தினால் தொழில் இல்லை என்ற பேச்சே இருக்காது. இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழலாம் என்பதுதான் விவசாயியின் இலக்கணம்.

த.அகில்செல்வன், மாணவன்
*(நெடுந்தீவு மேற்கு, சைவப்பிரகாச வித்தியாசாலை- பாடசாலை மாணவருக்கான தோட்டப் போட்டியில் மூன்றாவது இடத்தைப் பெற்றவர். )*



கேள்வி: நீங்கள் இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்கள் தோட்டத்தையும் கவனித்துக் கொண்டு பரீட்சைக் கும் தயாராகிக்கொள்வதில் ஏதாவது கஷ்டங்கள் இருக்க வில்லையா?

பதில்: அப்படி எதுவும் இல்லை? அதிகாலையில் எழுந்தால் உடலுக்கு ஒரு தென்பும் பாடங்களை மனனம் செய்து கொள்ளக்கூடியதான மனோநிலையும் இருப்பதை உணரமுடிகிறது.

கேள்வி: உங்களது பயிர்ச்செய்கை முயற்சியில் நீங்கள் மட்டும் ஈடுபடுகிறீர்களா அல்லது யாராவது உதவுகிறார்களா?

பதில்:பாடசாலை தவிர்ந்த கூடுதல் ஓய்வு நேரங்களைத் தோட்டத்திலேயே செலவிடுகிறேன். எனது தகப்பனார் கொஞ்சம் அனுபவம் மிக்கவர். அவரதும் ஏனைய சகோதரர்களினதும் ஒத்துழைப்பும் தாராளமாக உண்டு.

கேள்வி: இது மாணவருக்கிடையிலான போட்டி. எனவே, இதில் உங்களது செயற்பாடுகள் தான் முக்கியமாக இருக்கவேண்டும். அதுபற்றி என்ன சொல்லுகிறீர்கள்.

பதில்: போட்டியென்று வரும்போது போட்டியாளரின் உழைப்புத்தான் முக்கியம் எனது தோட்டத்தில் எனது உழைப்பு அந்தளவுக்கு உள்ளது. பாடசாலைக்குப் போவதால் இடைப்பட்ட நேரத்தில் வீட்டில் இருப்பவர்கள் கவனிக்கத்தானே வேண்டும்.

கேள்வி: உங்கள் தோட்டத்தில் உள்ள பயிர்வகைகள் என்ன? அவற்றை எவ்வாறு பாதுகாக்கிறீர்கள்? கிடைக்கக்கூடிய வருமானம் என்பவற்றைக் கூறமுடியுமா?

பதில்: தானியப்பயிர், இராசவள்ளி, மரவள்ளி, மோதகவள்ளி உட்பட இங்கு வளரக்கூடிய பயிர்களைச் செய்துள்ளேன். ஆடு,மாடு என்பவற்றின் எரு போன்றவற்றை முக்கி[illegible]மாகப் பயன்படுத்துவதுடன் எலி, அகிளான், பறவைகளிடமிருந்து பாதுகாக்க எனதுவீட்டார் உதவுகிறார்கள். கிருமிநாசினிகளுக்குப் பதிலாக மாடுகளின் சலம், வேப்பம் விதைகளை ஊறவிட்டு அவற்றைப் பயன்படுத்துகிறேன். எலிக்குப் பொறிவைத்து அவற்றை அழித்து வருகின்றேன்.

கேள்வி: போட்டியில் வெற்றி பெறுவதற்கு விவசாய நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தின் உதவி எவ்வாறு இருந்தது?

பதில்: பயிர் உற்பத்திக்கான விதைகள், ஆலோசனைகள் திணைக்கள உதவியுடன் கிடைத்தது. போட்டியைப் பொறுத்தவரை விதிமுறைகளுக்கு அமைவாக இருந்தது. அதனாலேயே பரிசும் பெறக் கூடியதாக இருந்தது.

கேள்வி: விவசாயத்தில் மிகுந்த ஆர்வம் இருப்பதாகச் சொல்கிறீர்கள். தொழில் ரீதியாக இந்தத்துறையில் பதவிகிடைக்க வேண்டும் என்ற விருப்பம் உண்டா?

பதில்: எதையும் இப்போது சொல்ல முடியாது. ஆனால், விவசாய செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபாடுகாட்டுவேன் என்பதை மட்டும் கூறமுடியும்.

கேள்வி: நெடுந்தீவில் தண்ணீர் ஒரு பிரச்சினை. எப்படி அதனை சமாளிக்கிறீர்கள்?

பதில்: மாரிமழை மட்டும் தண்ணீர் பிரச்சினை இல்லை. ஏனைய நாள்களில் கோட்டைக்காட்டில் இருந்து வண்டில் மூலம் எடுத்து வருகிறேன். குறைந்த அளவில் கிணற்று நீரையும் பயன்படுத்த முடிகிறது.



இதனால் பெரிய வருமானம் என்று எதிலும் கிடையாது. ஆனாலும் விவசாயம் எனக்குப் பிடித்தது.

செல்வி
சோ.சுலோஜனா
(16)
*(மாணவி-நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், பாடசாலை மாணவர்களின் வீட்டுத் தோட்டப் போட்டியில் முதலிடம் பெற்றவர்)*

கேள்வி: மாண வர்களுக்கான இந்தப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?

பதில்: யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஏனைய பாடசாலை மாணவர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவேண்டும் என்பதை ஊக்கப்படுத்தி மாணவர்களுக்கு இதற்கெனத் தேவைப்படும் சில உதவிகளை வழங்கியது எனக்கும் அது கிடைத்தது. அதனைத் தொடர்ந்து தான் இதில் ஆர்வம் ஏற்பட்டது.

கேள்வி: உங்களது தோட்டம் மிகவும் சிறிய நிலப்பரப்பை உள்ளடக்கியிருந்தாலும் யூரியாப் பைகளைப் பயன்படுத்தி நல்லமுறையிலும் அதேசமயம் மிகவும் பசுமையாகவும் பயிர்களை வைத்திருக்கிறீர்கள். அதுபற்றி கூறமுடியுமா?

பதில்: உரப்பைகளில் மண்போட்டு நானே தயாரிக்கும் சேதனப் பசளைகளைப் பயன்படுத்தியும் தினமும் செடிகளுக்குத்தண்ணீர் விட்டும் கிருமிகளின் தாக்கத்திற்கு உட்படாதவாறு மாட்டுச் சலம் போன்றவற்றைத் தெளித்தும் செடிகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறேன். அதனால்தான் அவை செழிப்பாகவும் குளிர்ச்சியாகவும் நல்ல பயனைத் தரக்கூடியதாகவும் இருக்கிறது.

கேள்வி: உங்களது முயற்சி உங்கள் குடும்பத்திற்கு எந்த அளவுக்கு உதவியாக இருக்கிறது?

பதில்: வீட்டுத் தேவைகளுக்கு நாங்கள் வெளியில் காய்கறிகள் வாங்குவதில்லை. இப்போது மிளகாய், கத்தரிக்காய் போன்ற மரக்கறிகளின் விலைகள் நீங்கள் தெரிந்ததுதானே. மிளகாய், கத்தரிக்காய் உட்பட ஏனைய மரக்கறிகளையும் இன்றைய விலைக்கு விற்கக் கூடியதாக இருந்ததில் எமது ஏனைய தேவைகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கிறது.

கேள்வி: சேதனைப் பசளைக்காக நீங்கள் எதைப் பயன்படுத்துகிறீர்கள்.

பதில்: பாவட்டை, நொச்சி, எருக்கம் இலை, சீமைக்கிழுவை இவைகளைப் பயன்படுத்துகிறேன். சாணத்தை ஊறவிட்டு 3 கிழமைக்கு பின் வடித்தெடுத்து தண்ணீருடன் கலந்து அடிப்பதனால் நோய்த் தாக்கங்களை கட்டுப்படுத்த முடிகிறது. எல்லாவகையிலும் அப்பா, அம்மா, சகோதரிகள் உதவியாக இருக்கிறார்கள்.

கேள்வி: ஜி.சீ.ஈ.சாதாரணப் பரீட்சைக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் நீங்கள் விவசாயப்பாடம் எடுக்கவில்லை என்கிறீர்கள். ஏனைய பாடங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளபோது தோட்டச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளதால் சிரமங்கள் எதுவும் இருக்கிறதா?

**செவ்வி: லக்ஸ்மன்**

பதில்: இல்லை.இது மிகவும் சிறிய அளவிலானது தானே. ஓய்வு நேரங்களில் கவனம் செலுத்தினாலே போதும். அம்மா, அப்பா, சகோதரிகளும் கவனித்துக்கொள்கிறார்கள்தானே?

கேள்வி: உங்களைப் போன்ற மாணவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.

பதில்: படிக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் வீட்டுக்குப் பயன்தரக்கூடிய முயற்சிகளை சிறிய அளவில் செய்தால் கூட வீட்டில் உள்ள கஷ்டங்களை ஓரளவாவது குறைக்கமுடியும். எங்கள் வீட்டில் போதிய நிலம் இல்லை. சிறிய அளவில் உள்ள நிலத்தைப் பயன்படுத்துவதால் தான் அநேக தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்கிறது.

*இலம் என்(று) அசை (இ) இருப்பாரைக் காணின் நிலம் எனும் நல்லாள் நகும்.*

என்கிறார் திருவள்ளுவர்.

அதேவேளை எனது வீட்டுத் தோட்டத்தில் இருந்து பாடசாலைக்கும் காய்கறிகளைக் கொடுப்பது மனதுக்கு மகிழ்வாகவுள்ளது.



நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் விளையாட்டு முற்றத்தில் சிறுவர்கள் மகிழ்வுடன் விளை[illegible]யாடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

இந்துக்கள் அனைவரும் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அந்த மறுபிறப்பும் கர்ம பலனை ஒட்டியே அமைகிறது என்றும் நம்புகிறார்கள்.

கர்மபலன் அல்லது வினைப்பயன் என்ன என்பதை ராமகிருஷ்ண பரமஹம்ஸர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

''வினைப்பயனின்று யாரும் தமபித்துக்கொள்ள முடியாது. முற்பகலில் செய்கிற வினையின் விளைவு பிற்பகலில் வாய்த்தே தீரும்.''

''பூர்வஜென்ம வினைப்பயன் இன்பதுன்பங்களாக மறுபிறப்பில் மனிதரைத் தொடர்ந்து வருகின்றன. பிரார்த்த கர்மபலன் தருவதை யாரும் தடுக்க முடியாது.''

''பழவினைப் பயனை மனிதன் அனுபவித்தே தீர வேண்டும். குருடன் ஒருவன் கங்கா ஸ்நானம் செய்தான். அதன் பயனாகப் பாவங்களனைத்தும் அவனை விட்டுப் போய் விட்டன. ஆயினும் அவன் பழையபடி குருடனாகவே இருந்தான். அவன் குருடன் ஆனதற்குக் காரணம் பழவினை.''

### ஞானக்கதிர்

மறுபிறவி உண்டு என்பதாலும், போன பிறவியில் கர்ம பலன்களை இந்தப் பிறவியில் அனுபவித்தே தீர வேண்டும் என்பதாலும், ஒருவன் இந்தப் பிறவியிலாவது நல்லதைச் செய்து அடுத்த பிறவி சுகமானதாக அமைய வழி செய்து கொள்ள வேண்டும் என இந்துமதம் போதிக்கிறது.

விதி - மறுபிறவி ஆகிய இரண்டையும் இணைத்துப் பார்க்கின்ற போது வாழ்க்கையில் புரியாத எத்தனையோ புதிர்களுக்கு விடை கிடைத்து விடுகிறது.

ஓரே வீட்டில் ஒரே பெற்றோருக்குப் பிறக்கும் இரண்டு குழந்தைகள் ஒரே மாதிரி இருப்பதில்லை.

உருவத்தில் மட்டுமல்ல, குணத்திலும் கூட அவை வேறுபடுகின்றன.

ஒரு குழந்தை அறிவாளியாக இருக்கிறது; இன்னொரு குழந்தை மூடனாக இருக்கிறது.

ஒரு குழந்தை நல்லவனாக இருக்கிறது; இன்னொரு குழந்தை தீயவனாக இருக்கிறது.

ஒரே பெற்றோர்கள், ஒரே சூழ்நிலை, ஆயினும் குழந்தைகளிடையே இத்தகைய முரண்பாடான குணங்கள் இருப்பதற்கு எது காரணம்?

பூர்வ ஜென்மத்தின் வினைப்பயனே காரணம் என்கிறது இந்துமதம். இதுவரை இதற்கான வேறு விளக்கத்தை எவரும் சொன்னதாகத் தெரியவில்லை.

போன ஜென்மத்தின் கர்மப்படி இந்த ஜென்மத்தில் ஒருவனுக்கு நடைபெறுகின்ற காரியங்களை விதி என்று சொல்லுகிறோம்.

விதியை அனுபவிப்பதற்காகவே அவன் அடுத்த பிறப்பை எடுக்கிறான்.

போன ஜென்மத்தின் கஷ்டங்களை இந்த ஜென்மத்தில் அவன் அனுபவித்தாலும், இந்த ஜென்மத்தில் புண்ணியம் செய்தால் அடுத்த ஜென்மம் அவனுக்கு நல்லபடியாக அமையும். இது இந்து மதத்தின் உறுதியான கோட்பாடாகும்.

இதைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ராமகிருஷ்ணர், ''கர்மம் ஒவ்வொன்றுக்கும் கர்ம பலன் உண்டு. மிளகாயைச் சாப்பிட்டால் வயிற்றில் எரிச்சல் உண்டாவது திண்ணம்.

பாபம் செய்கின்றவனுக்கு அதன் விளைவு வந்தே தீரும்.'' என்கிறார்

வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளுக்கு, புரியாத பிரச்சினைகளுக்கு இந்து மதம் இப்படித்தான் விளக்கம் சொல்லி இருக்கிறது.

## வாசகர் திருமுகம்

### நிஷா புயலினால் ஏற்பட்ட பாதிப்பு வெறும் கற்பனைதானா?

''நிஷா'' குடாநாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்தது என்பது வெறும் கற்பனாவாதம் என்றுதான் சொல்லவேண்டும். அண்மையில் நடைபெற்ற கண்காட்சி இதனை நிரூபிப்பதாக அமைந்தது. கண்காட்சியில் இடம்பெற்ற மலிவு விற்பனையில் எம்மக்களால் வீசியெறியப்பட்ட பணம் கொஞ்சநஞ்சமல்ல. காட்டாற்று வெள்ளம்போல பொங்கிப் பிரவாகித்துப் பாய்ந்த வெள்ளப்பெருக்கின் மத்தியில் இவ்வளவு பணம் எப்படித் தேங்கிக் கிடந்தது?

29.12.2008 அன்று நிகழ்ச்சி நடைபெற்ற பிரபல கல்லூரியின் மைதானத்தில் பல்லாயிரக் கணக்கான உணவுப் பொதிகள் உண்டதுபாதி, உண்ணாதது பாதியாக வீசப்பட்டுக் கிடந்தன. விலைகொடுத்து வாங்கிய ஆயிரக்கணக்கான உணவுப் பொதிகள் உண்ணப்படாமல் அப்படியே வீசப்பட்டுக் கிடந்தன. இது வீட்டுப் பழக்கந்தானே? தொட்டில்ப் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பது உண்மைதான். இவை நான் ஒருசில மணித்தியாலங்களுக்குள் அவதானித்த விடயங்கள். அப்படியானால் கண்காட்சி நடைபெற்ற மூன்று நாள்களையும் நினைத்துப் பாருங்கள் தினந்தோறும் வீடுகளில் எவ்வளவு உணவு விரயமாக்கப்படுகிறது என்பதை கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாததல்லவா?

பெருமைக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய விடயம் என்னவென்றால் இயற்கை அனர்த்தங்களால் எமது மக்களின் பொருளாதார பலத்தை உடைத்துவிட முடியாது என்பதே. நிஷா,வெள்ள, சுனாமியென்ன, வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயம் அல்லது எகிப்து தேசாதிபதியாகிய பார்வோனின் காலத்தில் தேவசாபத்தினால் ஏற்பட்ட அக்கினிமழை போன்ற அனர்த்தங்கள் ஏற்பட்டால் கூட எமது மக்கள் சளைத்துவிட மாட்டார்கள் என்பது பெருமைக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய விடயங்களாகும்.

நிஷாவினால் எமது மக்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்பதே உண்மை. அந்த உளவியல்ப் பாதிப்புக்கு நடைபெற்ற களியாட்ட நிகழ்வு சிறந்த உளவியல் மருத்துவமாக அமைந்தது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்குப் பல கோடி நன்றிகள் உரித்தாகட்டும்.

குறிப்பாக தென்னிலங்கை இளநங்கையரின் ஒயிலாட்டம் கண்களுக்கு விருந்தாக அமைந்தது.

எனவே ''நிஷா'' குடாநாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்தது என்பது சற்று மிகைப்படுத்தப்பட்ட, கற்பனை கலந்த ஒன்றாகவே எனக்குத் தோன்றுகிறது. மற்றவர்களுக்கு எப்படியோ...! தெரியவில்லை...!!

*யாழ்.வதிரிவாசன்*

### மீள் பரீட்சை நடத்துவார்களா?

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாக வணிகமானி பட்டத்திற்காக பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்குக் கட்டாய பாடமாக ஆங்கிலம் துணைப்பாடங்களில் ஒன்றாக இரண்டு வருடங்கள் சித்திபெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாவிட்டால் அடுத்த தடவை இடம்பெறும் போதே பரீட்சைக்குத் தோற்றவேண்டும். குறிப்பிட்ட பரீட்சைகள் சீரான கால இடைவெளியில் நடப்பதில்லை. சிலவேளை ஒருவருடம் அல்லது ஒருவருடத்திற்கு மேலும் செல்லலாம்.

இதனால் பல மாணவர்கள் ஆங்கிலமொழி பாடத்திற்காக வருடக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் பட்டத்தைப் பூர்த்திசெய்ய முடியாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் ஏனைய பட்டங்களுக்கு இடம்பெறுவது போன்று வெளிவாரி வணிகமாணி மாணவர்களுக்கு மூன்று மாதங்கள் இடைவெளியில் ஆங்கிலபாட மீள்பரீட்சைகளை நடத்தி மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்ய வேண்டும். இதனை உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து மீள்பரீட்சை நடத்தி மாணவர்களின் எதிர்காலம் முன்னேற வழிவகை செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

*மானிப்பாய்* எஸ்.ரமேஸ்

## செய்திச்சரம்... செய்திச்சரம்...

### தனியார் வீடுகளில் பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஜன.30

நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ள மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் தனியார் வீடுகளில் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வீடுகளில் போதிய வெளிச்ச வசதிகள் இல்லாததால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பெற்றோர் தெரிவித்தனர்.

(202-207)

### மதகு புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

நல்லூர் அரசடி வீதியில் சிவன் வீதிக்குச் செல்லும் மதகு மீளப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மதகு அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் சேதமடைந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த மதகை மீளப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (202-224)

### ஊரெழு அம்மன் ஆலய வெளி வீதியில் தென்னங்கன்றுகள்

கோப்பாய், ஜன.30

ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்த்தினி அம்மன் ஆலய வெளிவீதியின் ஓரங்களில் 40க்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் எதிர்வரும் காலங்களில் ஆலய வீதி அழகு பெறுவதுடன் ஆலயத் தேவைக்குரிய தேங்காய்களையும் பெறும் வழி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-72)

### கணிதபாட மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜன.30

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு இல.1 எதிர்வரும் திங்கட்கிழமை நடத்தப்படுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(202-207)

### பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் பத்திரிகையில் அறிவிக்கப்படும் என்று பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளார். (-9)

### கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்

மந்திகை,ஜன.30

சுகாதார சேவைத் திணைக்களம், கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரன் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எம். யோகீஸ்வரதேவரிடம் இந்த அம்புலன்ஸை சம்பிரதாயபூர்வமாகக் கையளித்துள்ளார்.

இந்த வைபவத்தில் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (202-218)

### தென்மராட்சிப் பிரதேச வர்த்தக நிலையங்களில் தேசியக் கொடிகள்

யாழ்ப்பாணம், ஜன.30

தென்மராட்சிப் பிரதேச வர்த்தக நிலையங்கள், ஏ - 9 வீதியின் அருகில் உள்ள குடியிருப்புகள் ஆகியவற்றில் அண்மையில் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு நகரைக் கைப்பற்றிய படையினருக்கு நன்றி தெரிவிக்கும் துண்டுப் பிரசுரங்களும் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன. (202-207)

### சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.30

இணுவில் இளந்தொண்டர் சபையினரால் இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படுகின்ற வாராந்த சொற்பொழிவு நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சைவப்புலவர் நித்திய தசீதரனின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (202-9)

### கோழி வளர்ப்பிற்கு பயனாளிகள் தெரிவு

கோப்பாய், ஜன.30

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஜி.ரி.சற். நிறுவன அனுசரணையோடு கோழி வளர்ப்பிற்கென பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் தெற்கு, கோப்பாய் வடக்கு, நீர்வேலி வடக்கு, அச்செழு, உரும்பிராய் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவில் ஒவ்வொரு பிரிவிலும் இருந்து தலா 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கென பயனாளிகளுக்கு கோழிகள், கூடு மற்றும் தீவனங்கள் வழங்கப்படவுள்ளன. (202-72)

### சூடைமீன் விலை குறைவு

மானிப்பாய், ஜன.30

கொட்டடி மீன் சந்தையில் கடந்த சில நாள்களாக சூடை மீனின் விலை குறைவடைந்து காணப்படுகின்றது.

ஒரு கிலோ சூடை மீன் 50 ரூபாவாக விற்கப்படுகின்றது.

பாரை, ஒட்டி, திரழி போன்ற மீன்கள் கிலோ 300 ரூபாவர்கவும், சுறா கிலோ 450 ரூபாவாகவும், இறால் கிலோ 400 ரூபாவாகவும், கணவாய் கிலோ 350 ரூபாவாகவும், நண்டு கிலோ 150 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன. (202-224)

### கமலாசனி வித்தியாலயத்துக்கு புத்தகங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.30

சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியினர் மட்டுவில் கமலாசனி வித்தியாலய பொது நூலகத்திற்கென ஒரு தொகுதி புத்தகங்களை அண்மையில் வழங்கினர்.

வங்கி முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் அண்மையில் வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதனிடம் புத்தகங்களைக் கையளித்தார். (202-207)

### பயிற்சியில் ஈடுபட்ட மாணவர்களுக்கு கை முறிந்தது

யாழ்ப்பாணம், ஜன.30

பாடசாலை விளையாட்டுப் போட்டிக்காக உயரம் பாய்தல் பயிற்சியில் ஈடுபட்ட மாணவர் இருவருக்கு கைகள் முறிந்தன.

இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வரணி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இடம்பெற்றன.

சரசாலை தெற்கைச் சேர்ந்த சற்குணராசா அஜந்தன் (வயது 13), வரணி, இயற்றாலையைச் சேர்ந்த வேலாயுதம் செந்தூரன் (வயது 15) ஆகிய மாணவர்களுக்கே கைமுறிந்தது.

இவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (202-207)

### ஓய்வுபெற்றோர் கௌரவிப்பு

இணுவில், ஜன.30

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் வருடாந்த ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது.

கணக்காளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற க.இராசையாவும் இலிகிதராகப் பணியாற்றி ஆசிரிய நியமணம் பெற்ற திருமதி வோ.ரதியும் இந்நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

(9 -45)

### உள்ளகத் தொலைபேசி இணைப்பு

கோப்பாய், ஜன.30

கோப்பாய் பிரதேச செயலக பணிமனைக்கு உள்ளகத் தொலைபேசி இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் பணிமனையின் செயற்பாட்டிற்கான தொடர்பாடல் வசதி மேம்பாடு அடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க் காணிக்கைகள்



22.01.2009 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த யாழ்.கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரும், மட்டுவில் வடக்கு மகா முத்து மாரி அம்மன் தேவஸ்தான உப தலைவருமான

**சங்கரப்பிள்ளை சின்னத்தம்பி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

மட்டுவில், வடக்கு,
சாவகச்சேரி.

மக்கள் சமூகம்.

## பழுதடைந்த உ.கிழங்குகள்

சுழிபுரம்,ஜன.30

சங்கானை பல நோக்குக் கூட்டு றவுச் சங்கத்தில் சில கிளைகள் ஊடாக வழங் கப்படும் உருளைக் கிழங்குகள் பழு தடைந்த நிலையில் காணப்படுகின்றன.

உரப்பைகளில் இக் கிழங்குகள் கொண்டுவரப்பட்டதாலேயே அவை பழுதடைந்தன என்று கூறப்படுகின்றது. (202-28)

## கண்ணீர்அஞ்சலி



மட்டுவில் வடக்கு மகா முத்துமாரி அம்மன் தேவஸ்தான உப தலைவரும், முன்னாள் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளருமான

**சங்கரப்பிள்ளை சின்னத்தம்பி**

அவர்கள் இறைபதமடைந்த செய்திகேட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மகா முத்துமாரி அம்மனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மட்டுவில், வடக்கு,
சாவகச்சேரி.

*ஆலய பரிபாலன சபை,*
*மகா முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.*

## 47 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்
25 ★ 02 ★ 1947



ஆண்டவன் அடியில்
16 ★ 12 ★ 2008

### அமரர் நல்லையா தவகுலசிங்கம்

அன்புக்கு அன்னையாய்
அறிவுக்கு தந்தையாய்
பழகுவதற்கு நல்ல நண்பனாய்
விளங்கிய எங்கள் குடும்ப தெய்வம்
மறைந்து நாள்கள் 47 ஆகிவிட்டதே.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நாளை (31.01.2009) சனிக்கிழமை மு.ப. 10.30-பி.ப.3.30 மணிவரை சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (82156) குடும்பத்தினர்.

## ஆசிரியையின் சங்கிலி திருடரால் அறுப்பு

சுழிபுரம்,ஜன.30

பாடசாலை முடிந்து வீடு திரும் பிக் கொண்டிருந்த ஆசிரியை ஒருவரை வழிமறித்த மோட் டார் சைக்கிளில்வந்த திருடர்கள் அவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறு த்துச் சென்றனர்.

கடந்த புதன்கி ழமை பண்ணா கம் வீதியில் பட்டப் பக லில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக் கிளில் வந்த திரு டர்கள் மாயமாய் மறைந்து விட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது. (-9-28)

## போட்டி பிற்போடல்

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை பிற் பகல் ஒரு மணிக்கு பிற்போடப்பட்டு ள்ளது. (202)

## ஓராண்டு நினைவலைகள்

மண்ணில்
11 ★ 07 ★ 1950



விண்ணில்
10 ★ 02 ★ 2008

### அமரர் அரியரத்தினம் பிரபாகரன்

திதி: சதுர்த்தி 30.01.2009

குடும்ப வானில் உதித்த நற்தாரகையே குலமது விளங்க உழைத்த எம் தெய்வமே!
கண்ணுக்கு இமையாய் காத்த எம் தந்தையே!
காலனவன் கைகளிலே நீர் மறைந்து ஓராண்டுகாலம் ஓடி மறைந்தாலும்
அன்பான உம் நினைவு அழியாது ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பத்தமேனி,
அச்சுவேலி. (82219)

என்றும் உம் நினைவோடு:
குடும்பத்தினர்.

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
14.04.1947



இறப்பு:
17.01.2002

மண்கும்பானைச் சேர்ந்த

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர் - மைதிலி நகைமாடம்)

திதி:- சதுர்த்தி [30.01.2009]

ஆண்டுகள் ஏழானாலும்
ஆறுமோ எங்கள் துயர்தான்
அகன்றிடா உம் நினைவுகளால்
அல்லும் பகலும் நாமிங்கே!

உம் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பிரிவால் துயருறும்:

யாழ்.மைதிலி ஜூவலர்ஸ்
79Z, செட்டியார் தெரு,
கொழும்பு-11

குடும்பத்தினர்.
மைதிலி நகைமாடம்
89V,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு ஒரு ஜோதி



இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த அண்ணல் மகாத்மா காந்தியின் 60 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

இற்றைக்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர்-1956 ஆம் ஆண்டில் - 'கல்கி' சஞ்சிகையில் அதன் அப்போதைய ஆசிரியர் பேராசிரியர் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களால் அண்ணல் காந்தியடிகள் பற்றி எழுதப்பட்ட கட்டுரையைத் தழுவி எழுதப்பட்ட ஆக்கம் இது.

சொல்லினில் அடங்குவதில்லை; நினைவுக்குள் நிற்பதில்லை; கற்பனைக்கு எட்டுவதில்லை; -காந்தி மகாத்மாவின் பெருமை.

கவிதை திகைக்கிறது; காவியம் திணறுகிறது; கலைகள் தலை வணங்குகின்றன;- காந்தியடிகளின் அற்புத சரித்திரத்தை எண்ணி.

இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நின்றவர்; கங்கை நதியைக் காட்டிலும் புனிதமானவர்; சூரியனைவிட சக்தி படைத்தவர்; தாயைக் காட்டிலும் கருணை உள்ளவர்; கடவுளைப்போல நம்மைக் காக்க வந்தவர்; சத்தியத்தைப் போலச் சலியாது நின்றவர்;-உலகம் போற்றும் உத்தமர்.

பாரத புண்ணிய பூமியில் இன்றைக்கு நூற்று நாற்பது வருஷங்களுக்கு முன்னால் அவர் பிறந்தார். 1869 ஆம் வருஷம் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி இந்த உலகத்தை உய்விக்க அவதரித்த அண்ணல் காந்தி அடிகள் 1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி மதவாதியொருவனின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி உயிர் நீத்தார்.

பாரத நாட்டில் இதற்கு முன்னால் இரண்டு அவதார புருஷர்களுடைய பிறந்த நாளைத்தான் தேசமெங்கும் கொண்டாடுவது வழக்கம். ஸ்ரீராமபிரான் அவதரித்த ராம நவமி உற்சவம் கொண்டாடுகின்றோம். ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஜன்மம் தரித்த கிருஷ்ண ஜெயந்தியைக் கொண்டாடுகின்றோம்.

ஸ்ரீராமபிரான் கையில் கோதண்டம் ஏந்தி இராவணாதி இராட்சதர்களை வதம் செய்து மக்களைக் காப்பாற்றினார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானோ பூதகி, சகடாசுரன் முதல் கம்ஸன், ஜராசந்தன், சிசுபாலன், தந்தவக்ரன் வரையில் பல அசுரர்களையும் கொடுங்கோலர்களையும் வதம் செய்து சாது ஜனங்களை இரட்சித்து அருளினார்.

இவை எல்லாம் இதிகாசங்களில் நாம் படித்தவை. இந்நிகழ்ச்சிகளைப் பரம்பரை பரம்பரையாக உண்மை என்று நம்பி ராம நவமியும் கிருஷ்ண ஜெயந்தியும் கொண்டாடி வருகிறோம்.

நம்முடைய காலத்தில் நம் கண் முன்னே நடமாடிய அவதார புருஷர் மகாத்மா காந்தி. இவர் பாரத மக்களை அடிமைத்தனம் என்னும் கொடிய பூதத்தின் வாயிலிருந்து காப்பாற்றினார். தீண்டாமை என்னும் ராட்சதன், மதுபானம் என்னும் அரக்கன், அறியாமை என்னும் காட்டேரி ஆகியவர்களிடமிருந்து நம்மைக் காந்தி மகான் இரட்சித்து அருளினார்.

ஸ்ரீராமர் கோதண்டம் ஏந்தினார். ஸ்ரீ கிருஷ்ணன் சக்ராயுதம் தரித்தார். ஆனால் காந்தி மகாத்மாவோ பலாத்கார ஆயுதங்களை அடியோடு புறக்கணித்து அஹிம்சையாகிய வில்லையும் சத்தியமாகிய சக்கரத்தையும் தரித்து பாழ்பட்டு நின்ற பாரத தேசம் தன்னை அடிமைத்தனம் முதலிய அரக்கர்களிடமிருந்து காப்பாற்றிப் பாரத மக்களுக்கு இன்ப வாழ்வை அளித்தார்.

ஒருவர் நமக்கு ஒரு உதவி செய்தால் அதை உயிருள்ள வரைக்கும் மறக்கக் கூடாதென்பது மனித குலத்தின் தர்மம். மக்களில் உயர்ந்தோர் அனைவரும் இந்தத் தர்மத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

*''தினைத்துணை நன்றி செய்யினும்*
*பனைத் துணையாக் கொள்வர்*
*பயன் தெரிவார்''*

என்று தமிழ் மறை சொல்கின்றது.

காந்தி மகாத்மா நமக்குச் செய்திருக்கும் நன்றி தினைத் துணையானதா? அற்ப சொற்பமானதா? அதற்கு ஈடு, இணை சொல்ல வேறு ஒன்று உண்டா?

''இந்தியாவில் உள்ள கோடி மக்களையும் முப்பது கோடிப் புழுக்களாக மதிக்கிறார்களே, அயல் நாட்டார்?'' என்று சுவாமி விவேகானந்தர் அன்று கதறினார்.

காந்தி மகாத்மா தோன்றி இந்திய மக்களை அந்த நிலையில் இருந்து உயர்த்தினார். மாநிலத்தில் நம்மை மனிதர்கள் ஆக்கினார். உலக சரித்திரத்தில் கண்டும் கேட்டுமிராத அஹிம்சா தர்ம முறையினால் பாரத நாடு சுதந்திரம் பெறச் செய்தார். இதன் மூலம் பாரத தேசத்தை உலகத்துக்கே வழிகாட்டும் ஜோதியாக விளங்கச் செய்தார்.

அத்தகைய மகா புருஷரை நாம் மறக்க முடியுமா? அவர் நமக்குச் செய்த நன்றியைத் தான் மறக்க முடியுமா? *

# 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் தொடர்பாகத் தான் விடுத்த உத்தரவு அனைத்தையும் உயர்நீதிமன்று வாபஸ்

## நீதிமன்றக் கட்டளையை நிறைவேற்ற அதிகாரம் செயற்படுத்த மறுத்ததால் வந்தவினை

கொழும்பு, ஜன.30

'ஹெட்ஜிங்' ஒப்பந்த விவகாரத்தை ஒட்டி உயர்நீதிமன்றம் விதித்த உத்தரவுப்படி பெற்றோலின் விலையை லீற்றர் நூறு ரூபாவாக்குவதற்கு அரசுத் தரப்பு மறுத்ததை அடுத்து, அவ்விடயத்தை ஒட்டிய தனது சகல கட்டளைகளையும் இடைநிறுத்த உயர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி அளித்தது.

இதனால்-

'ஹெட்ஜிங்' ஒப்பந்தப் பிரகாரம் பல வர்த்தக வங்கிகளுக்கு பலநூறு கோடி ரூபாக் கணக்கில் எரிபொருள் கொள்வனவை ஒட்டி மேலதிகமாக அரசு கொடுப்பனவு வழங்குவதை இடைநிறுத்தியும் -

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அஜந்த டி மெல் உட்பட மூத்த அதிகாரிகள் சில்ரைப் பணியிலிருந்து இடைநிறுத்தியும் -

பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகத்தை திறைசேரி செயலாளரின் நேரடிக் கண்காணிப்பிலும், பெற்றோலிய அமைச்சை ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பிலும் மாற்றும்படியும் -

உயர் நீதிமன்றம் ஏற்கனவே விடுத்திருந்த சகல இடைகால உத்தரவுகளும் கடந்த செவ்வாய்க்கிழமை செயலிழந்தன.

இதன் காரணமாக-

இனி, இந்த வங்கிகளுக்கு உரிய நிலுவைகளை - பல நூறு கோடி ரூபாக்களை - அரசு செலுத்த வேண்டியிருக்கும்.

பொற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் அஜந்த டி மெல் உட்பட மூத்த அதிகாரிகள் தத்தமது பதவியில் தொடரமுடியும் - என்று கூறப்படுகின்றது.

ஹெட்ஜிங்' ஒப்பந்தம் மூலம் பல ஆயிரம் கோடி ரூபா பணம் வங்கிகளுக்கு அடாத்தான முறையில் அரசினால் வழங்கப்பட்டு அரச நிதி விரயம் செய்யப்பட்டதாகவும், இவ்விடயத்தில் பெரும் ஊழல் இடம்பெறுவதாகவும் தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் தொடர்பான சகல கொள்வனவுகளையும் இடைநிறுத்தி உத்தரவு பிறப்பித்தது.

எரிபொருள் இறக்குமதிக் கொள்வனவு தொடர்பான விலையைவிட மேலதிக வரி நூறு வீதத்திலும் கூடாத வகையில் எரிபொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும்படியும் உயர்நீதிமன்றம் பணித்தது.

இதன்படி பெற்றோலை லீற்றர் நூறு ரூபா வீதம் விற்குமாறு உயர்நீதிமன்றம் அரசுக்கு உத்தரவு பிறப்பித்தது.

ஆனால் அந்த உத்தரவை ஒரு மாதம் கடந்தும் அரசு நடைமுறைப்படுத்தவேயில்லை.

நிறைவேற்று அதிகாரத்தின் இந்த முடிவு உயர்நீதிமன்றையும் நீதித் துறையையும் அவமதித்து, அபகீர்த்திப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டிய மனுதாரர்கள், உயர்நீதிமன்று அவமதிப்புக்கு உள்ளாவதைத் தவிர்ப்பதற்காக இந்த மனுக்களையே தாங்கள் ஒட்டு மொத்தமாக வாபஸ் பெறத் தயார் எனக் கடந்த வழக்குத் தவணையின் போது நீதிமன்றுக்குத் தெரிவித்திருந்தனர். இவ்விடயத்தை ஒட்டி அரசுத் தரப்பின் கருத்தை அறிந்து வந்து தெரிவிப்பதற்குக் கடந்த தவணையின்போது அரச சட்டத்தரணிக்கு உயர்நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அப்போது அரசுத் தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்சீவ ராஜரத்தினம் ஆஜரானார். உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவை நடைமுறைப்படுத்துவது குறித்து அரச உயர் பீடம் ஆலோசித்து வருவதால் அதற்குக் கால அவகாசம் அளித்து, வழக்கை இன்னொரு திகதிக்கு ஒத்திவைக்க அவர் கோரினார். ஆனால் அதனை மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகள் ஆட்சேபித்தனர்.

ஏற்கனவே உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட உத்தரவுகளை வழங்கி ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. இதன் பின்னரும் அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆலோசிக்கக் காலம் வழங்குவது என்பது கேலிக்கூத்து. போதுமான அளவு கால அவகாசம் வழங்கப்பட்டுவிட்டது. உயர்நீதிமன்ற உத்தரவை அரசும், நிறைவேற்று அதிகாரமும் உதாசீனப்படுத்திய நிலையில், உயர்நீதிமன்றம் அவமதிப்புக்குள்ளாகின்றது. அதைத் தவிர்ப்பதற்காக மனுக்களையே நாங்கள் வாபஸ் பெறத் தயார் என மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அதஷன நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. நீதிமன்றம் விடுக்கும் உத்தரவை செயற்படுத்த வேண்டிய கடப்பாடு நிறைவேற்று அதிகாரத்துக்கு உண்டு. ஆனால் அதைச் செய்ய - கடப்பாட்டை நிறைவு செய்ய - நிறைவேற்று அதிகாரம் தவறியமை பெரும் துரதிஷ்டம். ஆகவே இந்த மனுக்களை இத்துடன் முடிவுறுத்த நீதிமன்றம் அனுமதிக்கின்றது என நீதியரசர்கள் தெரிவித்தனர்.

''திறைசேரிச் செயலாளர் சமர்ப்பித்த ஒரு சூத்திரத்தை உயர்நீதிமன்றம் அங்கீகரித்தது. அதன்படி விலை நிர்ணயித்து எரிபொருளை விற்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அதைச் செய்ய நிறைவேற்று அதிகாரம் மறுத்துவிட்டது. விலைச் சூத்திரத்தையும் அரசே தந்து, அதனடிப்படையில் விற்பதற்கான இணக்கத்தையும் அரசுத் தரப்பே வழங்கியது. பின்னர் அதனடிப்படையில் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க, அதைச் செயற்படுத்தாது வேறு தரப்புகள் மீது அதற்குப் பொறுப்பும், குற்றச்சாட்டும் சுமத்தப்படுகின்றன. அவை ஏற்கத்தக்கவையல்ல.'' - என்று பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

''நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற வேண்டிய சட்டக் கடப்பாடும் பொறுப்பும் நிறைவேற்று அதிகாரத்துக்கு உண்டு. முதலில் நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுங்கள். அதில் ஆட்சேபனை இருந்தால் முதலில் அதை நடைமுறைப்படுத்திவிட்டு நீதிமன்றத்திடமே முறையிட்டு, உத்தரவைத் திருத்தி, நிவாரணம் பெற முடியும். ஆகவே, முதலில் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்திய பின்னர்தான் அடுத்த விடயம். அதைச் செய்யாமல் - ஒரு மாத காலத்துக்கு மேல் இழுத்தடித்த பின்னர் - திரும்பவும் அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்துப் பரிசீலிப்பதற்குக் கால அவகாசம் வழங்கும்படி கோருவது அர்த்தமற்றது. நீதிமன்ற உத்தரவைப் பரிசீலித்து - அது குறித்து யோசித்து - முடிவெடுப்பது என்ற கருத்தை ஏற்க முடியாது.'' - என நீதியரசர் ஷிராணி திலகவர்த்தனா தெரிவித்தார். (சி)

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

மந்திகை, ஜன.30

வடமராட்சி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, அதிபர் எஸ்.இராகவன் தலைமையில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச அரச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எம். யோகீஸ்வரதேவர் பிரதம விருந்தினராகவும் யாழ். வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி வி.புஸ்பநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (202-218)

* * *

யாழ்ப்பாணம், ஜன.30

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்னைப் போட்டி நாளை சனிக்கிழமை 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வலிகாமக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா பிரதம விருந்தினராகவும், வலி.தென் மேற்கு பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

* * *

யாழ்ப்பாணம், ஜன.30

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இராஜரட்ணம் வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்ப்பாணம், ஜன.30

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் பிரதம விருந்தினராகவும், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

* * *

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஏ.யேசுதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (204-325)

* * *

ஊரெழு கணேச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்வார். (72)

# 'சீமா' நிறுவனத்துக்கு யாழ்.விரிவுரையாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.30

'சீமா'(CIMA)என்னும் கணக்காளர் முகாமைத்துவ நிறுவனம் இத்துறையில் யாழ்ப்பாண மாணவர்களுக்கும் தனது கணக்காளர் பயிற்சி நெறிகளை வழங்குவதகான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் துறைகளில் விரிவுரைகளை வழங்கக்கூடிய புலமைபெற்ற விரிவுரையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களை இந் நிறுவனம் கோரியுள்ளது. குடாநாட்டில் இடம்பெறவிருக்கும் பயிற்சி நெறிகளின்போது விரிவுரைகளை நிகழ்த்துவதற்கு இவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன் சிஐஎம்ஏ கல்வி நெறிகள் தொடர்பாக எதிர்வரும் 10 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் பயிற்சிகளும் அளிக்கப்படும்.

விரிவுரையாளர்களாக விரும்புபவர்கள் தமது தகுதிகள் மற்றும் சுய விவரங்களுடன் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன் கொழும்பிலுள்ள சி.ஐ.எம்.ஏ. நிறுவனத்தின் E.Colombo@cimaglobal.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம். மேலதிக விவரங்களை 0112503880 என்ற தொலைபேசி மூலமும் பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தம்முடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசித் தொடர்பு இலக்கங்களையும் வழங்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர்களான சொ.சிவாகரன் (பிரதம விலை மதிப்பீட்டாளர், மாநகரசபை, மொரட்டுவ) சொ.பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், க.புவனேந்திரனின் (இந்திரன் - கனடா) அன்பு மாமியும் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சொக்கலிங்கத்தின் மனைவியுமான

**சொக்கலிங்கம் நாகேஸ்வரி**

அவர்கள் 26.01.2009 திங்கட்கிழமை சிவபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல மாத்தனை முருகனை பிரார்த்திக்கின்றேம்.

*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.*

வளர்மதி முன்னேற்றக்கழகமும்,
சனசமூகநிலையமும்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



திருமதி
**ஆறுமுகம் தையல்நாயகி**

அன்னையிடம்
10.08.1932

ஆண்டவரிடம்
02.01.2009

கடந்த 02.01.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(30.01.2009) வெள்ளிக்கிழமை வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையிலும், 01.02.2009 ஞாயிறு எமது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு,
கைதடி.

V.C. ஆறுமுகம் (கணவர்)
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# நான்காம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்

மலர்வு
29
*
11
*
1948



உதிர்வு
30
*
01
*
2005

எமது குடும்ப தீபம்

**திருமதி தங்கரட்ணம் ருக்குமணிதேவி**

உறவாகி வந்து என் உள்ளத்தில் உறைந்திட்டாய்!-பணி
தவறாத தன்மையால் எனைத் தங்கமாய்க் காத்திட்டாய்!
முறையாக எம்மை நன் மக்களாய் வளர்த்திட்டாய்!-இல்
அறநெறியில் உனை உருக்கு(ம்) மணியாக்கி நின்றிட்டாய்!
குறையின்றிக் குவலயம் போற்ற நீ வாழ்ந்திட்டாய்!
முறையிதோ இறைபதம் சென்று நீ சேர்ந்திட்டாய்!
மறையவே இல்லை மனம் மறக்குதே இல்லை!
நிறையவே நீ எங்கள் நினைவிலே நிற்கிறாய்!

நீங்கா நினைவுகளுடன்
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தங்கராஜா அன் சன்ஸ்,
டச்சு வீதி, உடுவில்.
தொ.பே: 0602214932

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி சுவாமிநாதர் (சுவாந்தி அப்பு)

(பூதவராயர் ஆலய தர்மகர்த்தா)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுவாமிநாதர் நேற்று (29.01.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் சச்சிதானந்தனின் அன்புத் தந்தையும் அருந்தவமணியின் அன்பு மாமனாரும் உமாபதிசிவம், உமாபிரியா, உமாசங்கர் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ந.ப. 12 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*மீசாலை.*

தகவல்:
சு.சச்சிதானந்தன் (மகன்).

# வீடு வாடகைக்கு

பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தியில் வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புக்கு: 077 8147091
முடிவுத்திகதி 06.02.2009

**PC SOLUTIONS**
Our Strength is Your Satisfaction

**UNBELIEVABLE OFFER**

| Item | Price |
|---|---|
| **Processor** | |
| 2.2 Dual core intel | 8800/= |
| 1.8 Dual core celeron | 5100/= |
| **Hard disk** | |
| 500GB Samsung | 9150/= |
| 160GB Samsung | 5300/= |
| **DVD + RW** | |
| Sony - Light Scribe | 4300/= |
| Samsung | 3500/= |
| **Monitor** | |
| 15.6" Samsung (LCD) | 14650/= |
| 17" Viewsonic (LCD) | 18500/= |
| **Mother Board** | |
| Foxconn G31MX | 5600/= |
| Asus P5GC | 6250/= |
| **Memory** | |
| 1GB DDR 11 Kingston | 1750/= |
| 2GB DDR 11 Kingston | 3000/= |
| **Pendrive** | |
| 2GB TDK | 900/= |
| 4GB TDK | 1100/= |
| **Casing** | |
| ATX Tower | 4000/= |
| **Printer** | |
| HP P1005 Laserjet | 13600/= |
| **Woofer** | |
| 2.1 SonicGear | 4100/= |
| **Speaker** | |
| X5 Tech | 600/= |

கணனி சம்மந்தமான அனைத்து சேவைகளும் தரமாகவும் மிகக் குறைந்த கட்டணத்துடனும் மேற்கொள்ளப்படுகின்றன.

**PC SOLUTIONS**
Computer Sales and Maintenance Centre
527/1, NAVALAR ROAD, JAFFNA

7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 25 * 02 * 1912



இறைவன் அடியில் 18 * 01 * 2002

அமரர் திருமதி கனகசபாபதி
இலட்சுமி அம்மாள்
(சங்கானை - உடுவில்)

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் எம்
மனதை விட்டு அகலவில்லை.

உங்களை அன்புடன் நினைவு கூறும்,
மகன், மகள்
மருமக்கள், பெறாமகன்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# கண்ணீர் அஞ்சலி

மீசாலை வடக்கைச் சேர்ந்தவரும், மீசாலை வடக்கு பூதவராயர் ஆலயத் திருப்பணிச் சபைத் தர்மகர்த்தாவும் பரிபாலகருமான

அமரர் **நல்லதம்பி சுவாமிநாதர்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்திக்காவும் இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பூதவராயர் ஆலயத் திருப்பணிச் சபை,
மீசாலை வடக்கு.

# மரண அறிவித்தல்கள்

## பிரான்சிஸ் ஜோர்ஜ்



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது இரத்தோட்டை, கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் ஜோர்ஜ் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் அரியமலர் தம்பதியினரின் அன்பு மகனும் விக்டோறியாவின் அன்புக் கணவரும் ஜெலாசியஸ், ஜெனோவா, பிரிஸ்கில்லா ஆகியோரின் அன்புத் தந்தையும் கில்பேட், ஜெயமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மேரி கில்பேட், பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் டிறோஜன், ஜெனுசன் ஆகியோரின் பெரியப்பாவும் றொஷான், சிபோறா, டெபிரியன் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.01.2009) வியாழக்கிழமை கண்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. அவரது பிறப்பிடமான பழைய பொலிஸ் நிலைய வீதி, கோப்பாயில் உள்ள அவரது தாயாரின் இல்லத்தில் அனுதாப நிகழ்வுகள் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*பழைய பொலிஸ் நிலைய வீதி,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.*

தகவல்:
தாயார்.

## பசுபதி விநாயகமூர்த்தி

(கிராம அலுவலர், புங்குடுதீவு)



புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி விநாயகமூர்த்தி அவர்கள் 27.01.2009 செவ்வாய்க்கிழமை வவுனியா வில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதி மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் கோபாலு- பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகராணியின்(ஆசிரியை, புங்குடுதீவு மகாவித்தியாலயம்) ஆருயிர்க் கணவரும் சிந்துஷா, நாகலக்ஷனா, வினோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் தனபாக்கியலட்சுமி, நிர்மலாதேவி, சார தாதேவி, சறோசாதேவி, கலைமதி(சுவிஸ்), அமரர் சாந்தகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மநாதன்(அதிபர், நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தி), யமுனாராணி (ஆசிரியை, வவுனியா), நிர்மலராசன்(பிரதேசசபை, புங்குடுதீவு), கேதீஸ்வரன், சற்குணராணி(கனடா), சோமசேகரன், சிவதர்ஷன்(கணக்காளர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், திருகோணமலை), அனுதர்ஷன்(பொது சுகாதாரப் பரிசோதகர், புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் புங்குடுதீவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணற்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*2ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

தகவல்:
கோ.பத்மநாதன்
(மைத்துனர்)

## திருமதி நாகம்மா நாகராசா



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி நாகம்மா நாகராசா நேற்று (29.01.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாகராசா (ஓய்வுபெற்ற லிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், விஜயகுமார் (பொறியியலாளர்) மற்றும் கலாதரன் (டென்மார்க்), ஸ்ரீமோகன் (ஜேர்மனி), உமாரதி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாவதி, கோமளாதேவி (டென்மார்க்), மதிவதனி (ஜேர்மனி), திருச்சபேசன் (முகாமையாளர், ஆசிரியர் வள நிலையம், வேலணை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருபன், சிந்துஜா, சாமிரா, சஞ்சிகா, சுபத்திரா, சுயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினமே (29.01.2009) வியாழக்கிழமையன்று அவரது மட்டுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா.நாகராசா (கணவர்),
வே.திருச்சபேசன் (மருமகன்).

கனகன் புளியடிச் சந்தி,
மட்டுவில், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை நிறுத்த வலியுறுத்தி சகல மாவட்ட மாணவர்களும் தொடர் உண்ணாவிரதம்!

சென்னை, ஜனவரி30

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், உடனடியாகப் போரை நிறுத்த இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று கோரியும் தமிழகம் எங்கும் மாணவர்கள் எரிமலையாக குமுறி யெழுந்து தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

சென்னை, சேலம், தஞ்சை, ஈரோடு, திருச்சி, கோவை, பெங்களூர், செங்கல்பட்டு, கும்பகோணம், மயிலாடுதுறை உட்பட தமிழகம் முழுவதும் சகல துறை மாணவர்களும் நெருப்பாக கொதித் தெழுந்துள்ளனர். இதுதொடர்பான விவரம் வருமாறு-

ஈழத்தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தக்கோரி தமிழ்நாட்டில் கல்லூரி மாணவர்கள் ஆங்காங்கே கடந்த 21 ஆம் திகதி முதல் வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடத்தி வருகின்றனர். 7 நாள்களாக உண்ணாவிரதமிருந்து வந்த செங்கல்பட்டு சட்டக்கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் தமது போராட்டத்தை முடித்தனர்.

இந்தநிலையில், சேலம் மத்திய சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் முதல் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர்.

இதேவேளை, கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் நகர பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பாடசாலைகள், நகராட்சி பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ - மாணவிகள் சுமார் 10 ஆயிரம் பேர் நேற்றுமுன்தினம் வகுப்புகளை புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

இதேபோல், விழுப்புரம் அரசு அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி மாணவர்கள் 2 ஆயிரம்பேர் நேற்றுமுன்தினம் வகுப்புகளை புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலூர் கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் வகுப்புகளை புறக்கணித்துவீதிக்குச் சென்று இலங்கை அரசை கண்டித்து கோஷம் எழுப்பினர்.

தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவ - மாணவிகள் நேற்று முன்தினம் கறுப்புப் பட்டி அணிந்து ஆர்ப் பாட்டம் நடத்தினர்.



மருத்துவத்துறை மாணவர்களின் போராட்டத்தின் போது.....

அதேவேளை, இலங்கை தமிழர்களை காப்பாற்றக் கோரி, கும்ப கோணத் தில் நேற்றுமுன்தினம் சட்டத்தரணிகள் ரயில் மறியல் போராட்டம் நடத்தினர்.

நெல்லை சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

அதேபோல், இலங் கைத் தமிழர் பிரச்சினைக்காக திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்களும் நேற்று முன் தினம் முதல் கால வரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது என முடிவு செய்திருந்தனர். இந்த நிலையில் சட்டக்கல்லூரிக்கு நேற்றுமுன்தினம் திடீரென விடுமுறை விடப்பட்டு மூடப்பட்டது.

## ஈழத்தமிழர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும் ''பெண்ணே நீ'' மாத இதழில் செய்தியாளராக முத்துக்குமார் பணியாற்றி வந்தார். அதற்கு முன்பு தொலைக்காட்சி தொடர்களில் உதவி இயக்குனராக பணியாற்றி உள்ளார்.

சென்னை கொளத்தூர் மக்கான் தோட்டம் திருவள்ளுவர் தெருவில் வசித்து வந்த இவருக்கு வயது 30.

தமிழ் மீது அதிகம் ஆர்வம் கொண்ட இவர் எப்போதும் தமிழர்கள் குறித்து ஆர்வமாக பேசுவார்.

கடந்த சில மாதங்களாக இலங்கையில் அப்பாவி தமிழர்கள் பாதிக்கப்படுவது முத்துக்குமாரின் மனதில் ஆழ்ந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

நுங்கம்பாக்கம் சாஸ்திரிபவன் அலுவலகத்துக்கு நேற்றுக் காலை 10:30 மணியளவில் வந்த அவர் கையில் பெற்றோல் கலனை கொண்டு வந்து இருந்தார்.

ஈழத் தமிழர்களை வாழ்த்தி முழக்கமிட்டும் அவர்களை காப்பாற்றக்கோரியும் சிறிலங்கா அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை கண்டித்தும் முழக்கமிட்டபடி பெற்றோலை தன் மீது ஊற்றினார். பிறகு தீயை பற்ற வைத்தார். உடல் முழுக்க தீ பற்றி எரிய அவர் சாஸ்திரி பவனுக்குள் அங்கும் இங்கும் அலறியபடி ஓடினார்.

திடீரென ஒரு வாலிபர் தீப்பிடித்த உடலுடன் ஓடுவதை கண்டதும் சாஸ்திரி பவன் வளாகத்தில் நின்றிருந்த பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர். அந்தப்பகுதி முழுக்க பரபரப்பு ஏற்பட்டது.

இதற்கிடையே உடல் முழுவதும் தீ எரிந்த நிலையில் முத்துக்குமார் ஒரு இடத்தில் சாய்ந்து விழுந்தார்.

அவர் மீது எரிந்துக் கொண்டிருந்த தீ அணைக்கப்பட்டு காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

காவல்துறையினர் சம்பவ இடத்துக்கு வந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்த முத்துக்குமாரை மீட்டனர். அவரை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர்.

காவல்துறையினர் அவர் வைத்திருந்த பொருள்களை சோதனையிட்டனர். அப்போது 14 அம்ச கோரிக்கை அடங்கிய ஒரு துண்டுப்பிரசுரத்தை முத்துக்குமார் வைத்திருப்பது தெரிந்தது.

அது தொடர்பான விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் முத்துக்குமார் உடல்நிலை மோசமானது.

மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அவர் உயிரிழந்தார். அவர் வைத்திருந்த துண்டுப்பிரசுரத்தில், ''விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். காலம் கடந்த நீதி, அநீதிக்கு சமமானது'' என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

முன்னதாக காவல்துறையினர் முத்துக்குமாரி டம் வாக்குமூலம் பெற்றனர்.

தீக்குளித்து போவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் முத்துக்குமார் விநியோகித்த மிக நீண்ட துண்டுப்பிரசுரத்தில் இந்திய அரசியல் தலைவர்களை கடுமையாகச் சாடியும் தற்போது இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள ஈழத்தமிழர்களுக்கான ஆதரவு நிலைப்பாடு குறித்தும் மிக விரிவாக குறிப்பிடப் பட்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள வெளிமாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களுக்கும், தமிழ் நாட்டுப் பொலிஸில் உள்ள இளைஞர்களுக்கும், தமிழீழ மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும், சர்வதேச சமூகம் மற்றும் பராக் ஒபாமாவுக்கும் என்று தனித் தனி தலைப்பிட்டு மிக நேர்த்தியாக-திட்டமிட்ட ஒழுங்கு அடிப்படையில்-அந்தக் கடிதம் அமைந்திருந்தது.

## பிரணாப் - மஹிந்த சந்திப்பு ஒரு நாடகம் தமிழினத்தைக் காக்க அணிசேருங்கள்!

### டாக்டர் ராமதாஸ் வேண்டுகோள்

சென்னை, ஜன. 30

வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி - இலங்கை ஜனாதிபதி மஹிந்தவின் சந்திப்பு ஒரு போலி நாடகம். எனவே, தமிழினத்தைக் காக்க தமிழர்கள் அனைவரும் வேறுபாடுகளை தூக்கி எறிந்துவிட்டு சிங்கள அரசுக்கும் அதற்குத் துணை போவோருக்கும் எதிராக ஒன்றிணைந்து, இலங்கையில் தமிழ் இனத்தை அழிக்க முயலும் சிங்கள அரசுக்குத் துணை போய்க் கொண்டிருப்பவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவோம் - என்று பா.ம.க. தலைவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

குழப்பங்களுடன் அரங்கேறியிருக்கும் பிரணாப் முகர்ஜியின் கொழும்புப் பயணம் தமிழகத்தைப் பொறுத்தவரை, தமிழர்களைப் பொறுத்தவரை பெரும் ஏமாற்றமாகவே முடிந்திருக்கிறது.

ஏனெனில், இலங்கையில் தமிழினப் படுகொலைக்குக் காரணமான போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழகத்தில் அரசியல் கட்சிகள் வலியுறுத்திக் கூறி வருவதற்கும் பிரணாப் முகர்ஜியின் கொழும்பு பயணத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

இதன் மூலம் போர் நிறுத்தம் குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசவே இல்லை என்பது தெளிவாகிறது. தமிழர்களைப் பாதுகாப்பதாக மட்டும் இலங்கை ஜனாதி பதி கூறியிருக்கிறார். இதைக் கேட்டு வர அமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கை சென்றிருக்கத் தேவையில்லை.

தமிழக முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா ஆகியோரை இலங்கைக்கு வருமாறு இலங்கை ஜனாதிபதி விடுத்த அழைப்பை உரியவர்களிடம் தெரிவிப்பதாக அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார். நடக்கட்டும் நாடகம் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

தனி மனித வாழ்க்கையின் அத்தனை சுதந்திரங்களையும் இழந்து விட்டு தமிழனாகப் பிறந்த ஒரே காரணத்துக்காக இலங்கையில் தமிழர்கள் தண்டிக்கப்படுகின்றனர். இதற்காக வேதனைப்பட்டுக் கொண்டே இருந்தால் இலங்கையில் நமது தமிழ் இனமே இல்லை என்றாகிவிடும். என்றுள்ளது.




## மரண அறிவித்தல்கள்

### பிள்ளையினார் சிவபாதம்

கொற்றாவத்தை, கோவியம்பதியை பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை, ராஜினி இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளையினார் சிவபாதம் நேற்றுமுன்தினம் (28.01.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிள்ளையினார் மற்றும் மீனாட்சியம்மா தம்பதியினரின் புதல்வரும் குணமாலையின் அன்புக் கணவரும் மணிமாறன், இளங்கோவன், ராஜினி, கோமதி, இளங்கீரன், குமுதினி, இளஞ்செழியன், இளஞ்சேரன், சீதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பி.ப. 3 மணியளவில் எள்ளன்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.*
பிள்ளையினார் கிருஷ்ணானந்தன் (சகோதரர்)

### சிவசம்பு கருணானந்தன்

*(ஓய்வுபெற்ற I.P.T)*

அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு கருணாணந் தன் 28.01.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் சிவசம்பு - கமலாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற லிங்கராணி (புலோலி)யின் பாசமிகு கணவரும் பவானந்தன், காலஞ்சென்ற சரவணபவானந்தன், யோகேஸ்வரி மற்றும் ஆறுமுகானந்தன் (வெள்ளையன் - இந்தியா), குகேந்திரன் (குஞ்சு - கனடா), ஆனந்த சுந்தரம் (வண்ணம்-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியிலுள்ள இல்லத்தில் இன்று 30.01.2009 வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 1 மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவசக்தி கோயிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.*

தகவல்:
சி.பவானந்தன் (சகோதரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையிலுள்ள இலங்கை வங்கி மீது அடையாளம் தெரியாத குழு தாக்குதல்!

## சட்டப் பேரவையை பெண்கள் முற்றுகையிட்டனர்

சென்னை, ஜன.30

தமிழ்நாடு சென்னையில் உள்ள வங்கி கட்டடம் மீதும் அந்த வங்கியின் அதிகாரிகளின் கார்கள் மீதும் அடையாளம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்களைக் காக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி சென்னையில் நேற்று வியாழக்கிழமை ஊடகவியலாளர் முத்துக்குமார் தனது உயிரை மாய்த்துக் கொண்டார். இதன் எதிரொலியாக சென்னையில் உள்ள இலங்கை வங்கி மீதும், அங்கு பணியாற்றும் அதிகாரிகளின் கார்கள் மீதும் அடையாளம் தெரியாத சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பாக தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்குவந்து விசாரணைகளைமேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் இலங்கை வங்கிகள் முன்பு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதேவேளை, இலங்கையில் போரை நிறுத்தக்கோரி தமிழக சட்டப்பேரவையை முற்றுகையிட்ட நூற்றுக்கணக்கான பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

'பெண்கள் முன்னணி' என்ற சார்பில் பேராசிரியர் சரஸ்வதி தலைமையில் சட்டப்பேரவை முற்றுகைப் போராட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. பொலிஸாரின் தடையை மீறி இவர்கள் சட்டப் பேரவைக்குள் நுழைய முயன்றமையால் கைது செய்யப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது.

### வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் 5 பேரும் வீதியோரங்களில் 13 பேரும் கொல்லப்பட்டுள்ளார். மற்றும் 18 பேரின் சடலங்கள் மூங்கிலாறும் மற்றும் இருட்டுமடு பகுதிகளில் உள்ளன. இதேவேளை, 178 பேர் காயமடைந்த நிலையின் இப்பகுதியில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(அசி)

### காயமுற்றோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என இணையத்தளங்களின் வெளியான தகவல்கள் வருமாறு:-

இலங்கை அரசு அறிவித்திருக்கின்ற பாதுகாப்பு வலயங்களுக்கு ஐ.நா. மற்றும் இதர அனைத்துலக நிறுவனங்களின் பிரதிநிதிகள் உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ள மக்களின் கருத்துகளை சுயாதீனமாகக் கேட்டறிய வேண்டும். வவுனியாவுக்கு செல்லும் நோயாளிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்து வைத்திருக்கவில்லை.

வவுனியாவுக்கு கடந்த வியாழக்கிழமை மட்டும் 200 நோயாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் பல பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்தவர்களுக்கான மருத்துவ தேவைகளுக்கான போக்குவரத்துக்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசகுழு மற்றும் ஐ.நா. உள்ளிட்ட அனைத்து அனைத்துலக அமைப்புக்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**காயமுற்றோரை எடுத்துச்செல்ல அனுமதி மறுப்பு**

அனைத்துலக மற்றும் ஐ.நா. விதிகளின் படி படுகாயமடைந்த பொதுமக்களுக்கான சிகிச்சைகளுக்குரிய போக்குவரத்துக்களை அனுமதிக்காமல் இலங்கை அரசு மறுத்திருப்பது பாரிய மீறலாகும்.

தங்களது குடும்பத்தாருடன் இணைந்து கொள்ள விரும்புவோரையும் கூட படைத்தரப்பு அனுமதிக்க மறுத்து வருகிறது. மோதல் பகுதியிலிருந்து வெளியேற விரும்புவது தனிநபரின் உரிமை என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

எந்த ஒரு தனிநபருக்கு எதிராகவும் எந்தத் தடையும் விதிக்கவில்லை. அனைத்துலக சமூகத்தினர் இதனையும் பொது மக்களின் உரிமையையும் புரிந்துகொள்ள வேண்டும்.

படையினரின் இனப்படுகொலைக் கரங்களில் சிக்கிக் கொள்ள விரும்பாத தமிழ் மக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்பார்கள்.

பொதுமக்களை படுகொலை செய்யும் நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர் என்று பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

### 48 மணி நேரத்துக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் - குறிப்பாக மோதல் பிரதேசங்களில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வெளியேறுவோருக்கு பாதுகாப்பும், அமைதியும், சுதந்திரமும், உரிமைகளும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும் என்றும் தாம் நேற்று விடுத்த அந்த விசேட அறிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார்.

அமைதித் தீர்வு காண தமது அரசு எடுத்த முயற்சிகள் புலிகளினால் முறியடிக்கப்பட்டமையை அடுத்து, புலிகளின் பயங்கரவாதத்தை அடக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு தமது அரசு தள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினரின் நடவடிக்கை காரணமாக பொதுமக்கள் மீதான புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் வடமாகாணத்தில் மிகவும் குறுகிவிட்டது. பெரும் எண்ணிக்கையான சிவிலியன்களைப் புலிகள் அங்கு கட்டாயப்படுத்தி மறித்து வைத்திருப்பதால் அந்த அப்பாவிப் பொது மக்களின் உயிர்கள் பேராபத்தில் சிக்கியுள்ளன - என்றும் ஜனாதிபதி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

''இப்படிப் பலவந்தமாகத்தடுத்து வைக்கப்பட்டுள்ள சிவிலியன்களின் பாதுகாப்பில் அதிக கரிசனை கொண்டதன் காரணமாக, நாம் மோதல் பகுதியில் பாதுகாப் புப் பிரதேசங்களை அறிவித்தோம்.

''ஆனால், பாதுகாப்பு படையினரையும் சிவிலியன்களையும் கொல்வதற்கான பீரங்கி ஏவுதளங்களை இந்தப் பாதுகாப்புப் பிரதேசங்களில் புலிகள் நிறுத்தி நிலைமையைக் கெடுத்தமை பெரும் துரதிஷ்டவசமாகும்.

''இந்தப் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதற்கு அடுத்த 48 மணிநேரத்துக்குள் அனுமதிக்க வேண்டும் என நான் புலிகளைக் கோருகின்றேன். அந்த சிவிலியன்கள் வெளியேறுவதற்கு பாதுகாப்பான பாதை வழங்கப்படும் என நான் உறுதியளிக்கிறேன்.''

- இவ்வாறு ஜனாதிபதி அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்த அறிக்கையைத் தாங்கள் வரவேற்கின்றனர் எனப் புதுடில்லியில் வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனன் நேற்றிரவு தெரிவித்தார்.

இந்தச் சிவிலியன்கள் வெளியேறுவதற்குப் புலிகள் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். (அ-சி)

### புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டு துளைக்காத கவசங்கள், நீர்மூழ்கிக் கப்பலுக்கும் படகுகளுக்கும் பொருத்தப்பட்டிருந்தன. அதே இடத்தில் இருந்து புலிகளின் 3 தற்கொலைப் படகுகள், கடற்போக்குவரத்து உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன-

அந்தப் பிரதேசத்தில் இருந்த முக்கியமான தொழிற்சாலையையும் புலிகளின் முகாம் ஒன்றையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

152 மீ.மீ ரக பீராங்கியும் படையினரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றது. வன்னிப் படை நடவடிக்கைகளின் போது இத்த கைய சக்தி வாய்ந்த ஆயுதம் கைப்பற்றப் பட்டது இதுவே முதல் தடவையாகும் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரி விக்கின்றது.


தேவை

தையல் தெரிந்த பெண்பிள்ளைகளும் மற்றும் கொம்பியூட்டர் அனுபவமுள்ள பெண்பிள்ளைகளும் தேவை.

தொடர்பு: றொசானி காமன்ஸ்
263/1, இராஜகாரியர் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

கிளை:-கனகசபை,
சபாபதிப் பிள்ளை வீதி,உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.




நேற்றைய ஷெல் வீச்சில் காயமுற்ற ஒரு பிஞ்சு - குழந்தையும் சிறுவனும்

# வவுனியா ரயில் சேவை மதவாச்சியுடன் நிறுத்தம்

கொழும்பு, ஜன.30

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையில் நடத்தப்பட்டு வந்த பகல் நேர யாழ்தேவி ரயில் சேவை நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது எனவும், இது மதவாச்சி வரையிலுமே நடத்தப்படும் என்றும் ரயில்வே கட்டுப்பாட்டு நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலிடத்து உத்தரவுக்கமைய இந்த ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், மறு அறிவித்தல் வரை இது நடைமுறையில் இருக்கும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டத்தையொட்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, வவுனியா, மன்னார் பகுதிகளிலிருந்து இருந்து வியாழக்கிழமை கொழும்பு மற்றும் நாட்டின் தென்பகுதிக்குப் பயணம் மேற்கொள்வதற்காக சென்றவர்கள் மதவாச்சி சோதனைச்சாவடியில் வைத்து திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஹர்த்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை மேலும் கஷ்டங்களுக்கு ஆளாக்குவதைத் தவிர்க்கும் முகமாகவே பிந்திய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகின்றது.

இதே வேளை, வன்னி மக்களின் அவலங்களால் ஏற்பட்ட உணர்வுகளின் காரணமாக ஓரிருவரால் எடுக்கப்பட்ட முடிவு மறு சீலனைக்கு உரியதாகியது என்றும் முந்திய முடிவு ஸ்தாபன ரீதியான தீர்மானம் அல்ல என்றும் என்.சிறிகாந்தா எம்.பி.கூறினார். (அ)

### மத்திய அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளர் பழ.நெடுமாறன் ஆகியோர் இணைந்தே மேற்படி அமைப்பை உருவாக்கியிருக்கின்றனர்.

இந்த அமைப்பு உடன் போராட்டத்தில் குதிக்கின்றது. அதன்படி இந்த அமைப்பு இன்று மௌன விரதப் போராட்டம் ஒன்றை நடத்துகின்றது. நாளை விரிவான ஆலோசனைக் கூட்டம் ஒன்றையும் நடத்து கின்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்த அமைப்பால் அடுத்து எடுக்கப்படவுள்ள நடவடிக்கை என்னவென்று நாளை அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்சி, அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இம்முறை ஈழத் தமிழர்களின் அவலம் கண்டு தமிழகம் முழுவதும் பெரும் எழுச்சி ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரி வித்தன. (அ-சி)

### வன்னி மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் நடுநிலை கண்காணிப்பாளர்கள் போன்றோர் வன்னிப் பிரதேசத்திற்குள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் குறித்தும் நவநீதம் பிள்ளை தமது விசனத்தை வெளியிட்டார்.

''பல மாதங்களாகத் தொடரும் போர், அடுத்தடுத்து இடப்பெயர்வு, கடும் மழை மற்றும் வெள்ளம் என்றவாறு மக்களின் ஆபத்தான நிலைமை மிகவும் கவலைக்குரியது. மனிதஉரிமைப் பணியாளர்கள் மற்றும் சுயாதீன கண்காணிப்பாளர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஊடகங்கள் ஊடாக மாத் திரம் கிடைக்கும் தகவல்களைக் காட்டிலும் உண்மை நிலைமை மேலும் மோசமாக இருக்கலாம்'' - என்றார் ஆணையாளர் நவநீதம் பிள்ளை.

புலிகளின் பலவந்த ஆள்சேர்ப்பு பொது மக்களை யுத்த கேடயங்களாக்குதல் என்பனவும் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதியில் தங்கியுள்ள பொது மக்கள் மீது அரச படையினர் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்துவதும் கண்டனத்துக்குரியவை என்றும் ஐ.நா. உயர் ஆணையாளர் தெரிவித்தார். (அ-2)


52 வது வருட சேவை
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

A/L 2011

வர்த்தகப் பிரிவு
புதியபிரிவுகள் ஆரம்பம் 31.01.2009 (8.00)
Eco. திரு. B.கஜீதரன் Acc திரு. P.பகீரதன்
B.St. திரு. யசோ

கலைப்பிரிவு

| | |
|---|---|
| Eco.திரு. B.கஜீதரன் | Tam.திரு.குழந்தை |
| Log.திரு.கமல் | Hict.திரு.பத்மராஜா |
| Geo.திரு.சுரேன் | Hin.திரு.N.T.தரன் |
| Hist.திரு.S.தாஸ் | Plsa.திரு.ஸ்ரீரங்கநாத் |
| Chi.திரு.ரூட் | Drma.திரு.மயூரன் |

புதிய பிரிவு ஆரம்பம் 31.01.2009 சனி 8.00
இன்று முதல் அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மீண்டும் ஓர் புதிய பிரிவு
யாழ்.நகரில் திறமை அனுபவம் வாய்ந்த இளம் முன்னனி ஆசிரியர்களின் கூட்டணியுடன்
A/L 2011 ஆரம்பம்:-காலை 8மணி
வழமையான ஆசிரியர் குழாம்
NEC
பொருமான் கோயிலுக்கு அருகாமை
Clock Tower Road, Jaffna
Navalar Education Centre

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212,214, கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்
மருத்துவப் புத்தகங்களுக்கு 25% - 40% வரையான விசேட விலைக்கழிவு வழங்கப்படுகின்றது.
ஏனைய புத்தகங்களையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

கணக்கீடு
P.பகீரதன்
B.B.A(Fm.Sp)
A/L 2009 Day
கம்பனி
Sat, Sun 2.00-3.00 pm
ஆரம்பம் :- 31.01.2009
(Sat 2pm)
NEC
Clock Tower Road, Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.